பக்கங்கள் எட்டு

விலை ரூபா 5-00

Registered as a News Paper in Sri Lanka


# வலம்புரி
VALAMPURI



அசல் 22 கரட் தங்க நகைகளுக்கு யாழ்நகரில் சிறந்த ஸ்தாபனம்

அர்ச்சனா ஜுவலர்ஸ்

118, கஸ்தூரியார் வீதி, 176/1, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

[கி-2127]



சங்கு 02 வள்ளுவர் ஆண்டு 2032 ஆடி 29 செவ்வாய்க்கிழமை (14 08 2001) தொலைபேசி 3378 ஒலி : 24


## சர்வதேசத்தால் தடை செய்யப்பட்ட ஆயுதம் படையினரின்பாவனையில்

(கொழும்பு)

சர்வதேச ரீதியில் தடை செய்யப்பட்ட இரசாயனஆயுதங்களை படைத்தரப்பினர், விடுதலைப்புலிகளுக்கு எதிரான போரில் பயன்படுத்தியுள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக சர்வதேசசெய்தி ஏஜென்சியொன்று தகவல் வெளியிட்டுள்ளது.

ஆர்.பி ஒ.ஏ மூவ்றொக்கற் லோஞ்சர் போன்ற மனித இனத்திற்கு பாரிய கெடுதியை ஏற்படுத்தக்கூடிய இரசாயன ஆயுதங்களை படையினர் பயன்படுத்திவருவதும் அவற்றைமீளவும்கொள்வனவு செய்துள்ளமையும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

மேற்படி ஆயுதங்களை 1980களில் உற்பத்தி செய்த அமெரிக்கா 1989ல் அதனை சர்வதேசமட்டத்தில் பயன்படுத்த தடை விதித்திருந்தது.

இந்நிலையிலும் இலங்கை அரசாங்கம் அவ் ஆயுதங்களை சட்ட விரோதமாக சர்வதேச கள்ளச் சந்தையில் கொள்வனவு செய்து விடுதலைப்புலி

(08 ஆம் பக்கம் பார்க்க)

## பெற்றோர்களே முன்வந்து 33 பிள்ளைகளை புலிகளுடன் இணைத்தனர்!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலை சிவன்கோயிலடியில் நேற்றுமுன்தினம்33பெற்றோர்கள் தமதுபிள்ளைகளை விடுதலைப்புலிகளுடன் இணைத்துள்ளனர்.

தமதுசுயவிருப்பின் பேரில் தாமாகமுன்வந்து விடுதலைப் போராட்டத்திற்கு பங்களிப்புச் செய்யவென தமது பிள்ளைகளை பெற்றோர்கள் விடுதலைப்புலிகள் அமைப்பினருடன் இணைத்தனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தை விடுதலைப்புலிகள் முழுமையான கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரவும் விடுதலைப் புலிகளின்தலைவர் வே.பிர

(08 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளுடன் பேசுவதை நிறுத்தக் கோரும்

# ஜே.வி.பியுடன் அரசு இணைந்தால் யுத்தம் உக்கிரமடையும் அபாயம்!

## அரசியல் அவதானிகள் அச்சம்

(கொழும்பு)

சிங்களப் பேரினவாதிகளுடன் ஜனாதிபதி சந்திரிகா கூட்டுச் சேர்ந்து காபந்து அரசு ஒன்றை அமைப்பாரேயானால் அந்த அரசின் ''நன்னடத்தைப்'' பதவிக் காலத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தாக்குதல்கள் அதிகரிக்கப்படலாம் என கொழும்பிலுள்ள அரசியல் ஆய்வாளர்கள் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

மக்கள்விடுதலை முன்னணியின் ஜே வி பி ஆதரவுடன் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா காபந்து அரசை அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டுவரும் அதேவேளை சிறுபான்மைத்தமிழ் மக்களின் ஆதரவை இழக்க வேண்டிவரும் என்ற அச்சமும் சிரேஷ்ட அமைச்சர்கள் மத்தியில் நிலவிவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஜே வி.பியின் அனுசரணையுடன் அமைக்கப்படும் காபந்து அரசின் காலத்தில் தமிழீழ விடுதலைப்புலிகளுடன் எந்தவிதமான பேச்சுவார்த்தையிலும் ஈடுபடக்கூடாது என்று அரசுக்கு ஜே.வி.பி நிபந்தனை விதித்துள்ளமை புலிகள் மீதான இராணுவ நடவடிக்கையில் கண்ணும் கருத்துமாக இருந்து செயற்பட்டுவரும் முக்கிய அமைச்சர்களின்கை ஓங்குவது தவிர்க்க முடியாது போய் விடும் எனவும் கருத்துநிலவி வருகிறது.

தமிழீழக் கோரிக்கையைக் கைவிட்டாலே ஒழிய விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபடக்கூடாதென்ற அரசின் பேரினவாதப் போக்கர்களின் கருத்தையே ஜே.வி.பியும் கொண்டிருப்பதினால் விடுதலைப்புலிகளுடன் பேசுவதற்கு அரசு தயக்கம்காட்டும்அதேவேளை

அவர்களுக்கெதிரான யுத்த முன்னெடுப்புக்கள் சிங்கள பேரினவாதிகளின் ஆசீர்வாதத்துடன் நடைபெறுமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

## அரசுக்கெதிராக ஐ.தே.கட்சி ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசுக்கு எதிராக ஐக்கிய தேசியக் கட்சி நேற்று எழுபது ஆர்ப்பாட்டங்களை கொழும்புக்கு வெளியே நடத்தியது.

பாராளுமன்றத்தைஉடனடியாக கூட்டுமாறும் சர்வஜன அபிப்பிராய வாக்கெடுப்பை ரத்துச் செய்யுமாறு மற்றும் ஜனாதிபதி சந்திரிகாவை பதவி விலகுமாறு கோரியே மேற்படி ஆர்ப்பாட்டங்கள் மொனராகலை பதுளை, புத்தளம், பொலநறுவை, அனுராதபுரம், நுவரெலியா

(8 ஆம் பக்கம் பார்க்க)

## தப்பியோடிய கைதிகளை கைதுசெய்ய பிடியாணை

### நீதிமன்றம் உத்தரவு

யாழ் சிறைச்சாலையில் இருந்து தப்பிஓடிய நான்கு கைதிகள் தொடர்பான தகவல்களை மக்களிடமிருந்து

பொலிசாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

தப்பியோடிய 4 கைதிகளையும் கைது செய்யும்பொருட்டு

அரசை அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டுவரும் அதே வேளை சிறுபான்மைத்தமிழ் மக்களின் ஆதரவை இழக்க வேண்டிவரும் என்ற அச்சமும் சிரேஷ்ட அமைச்சர்கள் மத்தியில் நிலவிவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஜே.வி.பியின் அனுசரணையுடன் அமைக்கப்படும் கூடாது என்று அரசுக்கு ஜே.வி.பி நிபந்தனை விதித்துள்ளமை புலிகள் மீதான இராணுவ நடவடிக்கையில் கண்ணும் கருத்துமாக இருந்து செயற்பட்டுவரும் முக்கிய அமைச்சர்களின்கை ஒங்குவது தவிர்க்க முடியாது போய்விடும் எனவும் கருத்துநிலவி வருகிறது.

தென்ற அரசின் பேரினவாதப் போக்கர்களின் கருத்தையே ஜே.வி.பியும் கொண்டிருப்பதினால் விடுதலைப்புலிகளுடன் பேசுவதற்கு அரசு தயக்கம்காட்டும்அதேவேளை அவர்களுக்கெதிரான யுத்த முன்னெடுப்புக்கள் சிங்கள பேரினவாதிகளின் ஆசீர்வாதத்துடன் நடைபெறுமென வும் எதிர்பார்க்கப்படுகிறது.

இதனால் காபந்துஅரசின் ஒருவருட நன்னடத்தைக்காலம் படுமோசமானஇராணுவ நடவடிக்கைகளைக் கொண்டிருக்குமென அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

இதேவேளை பாராளுமன்றத்தை 20ம் திகதி கூட்டுவ

(8ஆம் பக்கம் பார்க்க)

# தலைவராகசெயற்பட ஹிஸ்புல்லாவுக்கு தடை

## நீதிமன்றம் உத்தரவு

(கொழும்பு)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவராகப் பதவி வகிக்கவோ அல்லது செயற்படவோ கூடாதென கொழும்பு மாவட்ட நீதிமன்றம் எம்.எல்.ஏ.எம் ஹிஸ்புல்லாவிற்கு நேற்றுத் தடை விதித்துள்ளது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் செயலாளர் டாக்டர் ஏ எல்.எம் ஹப்ரத் தாக்கல் செய்த மனுவை அடுத்தே

(2ம் பக்கம் பார்க்க)

# பாராளுமன்றத்தை கூட்டும் அதிகாரம் சபாநாயகருக்கு உண்டு

(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர் அதிகளவானோர் பாராளுமன்றத்தைக் கூட்டுமாறு சபாநாயகருக்கு கோரிக்கை விடுத்தால், அவர் பாராளுமன்றத்தைக் கூட்டுவதில் சட்டப்பிரச்சினை ஏதுமில்லை,

இவ்வாறு முன்னாள் சபாநாயகர்ஸ்ரான்லி திலகரட்ண தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தை தற்போது கூட்டுவதில் சட்டச்சிக்கலேதும் உள்ளதா என்பது குறித்து திலகரட்ணவிடம் கேட்கப்பட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதியினால் ஒத்தி வைக்கப்பட்ட பாராளுமன்றத்தைக் கூட்டுவதற்கு சபாநாயகருக்கு உரிமை உண்டு. அத்துடன் பாராளுமன்றின் மேலாண்மையை பாதுகாப்பதும் அவரதுகடமையே என்று ஸ்ரான்லி திலகரட்ண தெரிதார். (இ)

# திவ்வியன் இன்று நீதிமன்றில் ஆஜர்

(யாழ்ப்பாணம்)

யாழ் பல்கலைக்கழக மாணவன் திவ்வியன் இன்று யாழ் நீதிமன்றில் ஆஜர்செய்யப்படவுள்ளார். பயங்கரவாத தடைச் சட்டத்தில் கீழ் படையினரால் கைது செய்யப்பட்டு யாழ். சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் திவ்வியன் தொடர்பான வழக்கு விசாரணைகளை மேற்கொள்ளும் பொருட்டு யாழ். நீதிமன்றில் நீதவான் இ.த.விக்கினராஜா முன்னிலையில் ஆஜர் செய்யப்படவுள்ளார்.

யாழ். நீதிமன்றில் நான்காவது முறையாக திவ்வியன் ஆஜர்படுத்தப்படுவது இங்கு குறிப்பிடத்தக்கது. (ந- 5- 6)

# தப்பியோடிய கைதிகளை கைதுசெய்ய பிடியாணை

## நீதிமன்றம் உத்தரவு

யாழ் சிறைச்சாலையில் இருந்து தப்பிஓடிய நான்கு கைதிகள் தொடர்பான தகவல்களை மக்களிடமிருந்து பெற்றுக்கொள்ளும் வகையில் நான்கு கைதிகளின் புகைப்படங்களையும் பத்திரிகைகள் வாயிலாக பிரசுரிக்குமாறு யாழ் நீதிமன்ற நீதவான் இ.த. விக்கினராஜா யாழ் பொலிசாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

தப்பியோடிய 4 கைதிகளையும் கைது செய்யும்பொருட்டு நீதவானால் பொலிசாருக்கு பகிரங்க பிடியாணைபிறப்பிக்கப் பட்டுள்ளதுடன் பொது மக்களிடமிருந்தும் தகவல்களைப் பெறுமாறும் உத்தரவிடப்பட்டுள்ளது. [ந-5-6]

# க.பொ.த.(உயர்தர) பரீட்சை விடைத்தாள்திருத்தும் பணி 29ந் திகதி முதல் ஆரம்பம்

(கொழும்பு)

தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் க.பொ.த உயர்தரப் பரீட்சையின் விடைத்தாள் திருத்தும்பணியின் முதலாவது கட்டம் இம் மாதம் 29ம் திகதி முதல் அடுத்த மாதம் 12ம் திகதி வரை கொழும்பில் நடைபெற உள்ளது.

கொழும்பு இந்துக்கல்லூரியில் இடம்பெறவுள்ள இந்த திருத்தும்பணி தினமும்காலை

(8ஆம் பக்கம் பார்க்க)

# அமைச்சர் தலைமையிலான குழு லண்டன் பயணம்

(கொழும்பு)

துறைமுகங்கள் அபிவிருத்தி அமைச்சர் ரொனி டி டுமல் தலைமையில்உயர்மட்டக்குழுவொன்று நாளை அல்லது மறுநாள் லண்டன் சென்று அங்கு போரபாய மதிப்பீட்டுக் குழுவுடன் (டபிள்யூ. ஆர், ஆர். சி) பேச்சு நடத்தவுள்ளது.

கொழும்புத்துறைமுகம் பாதுகாப்பான துறைமுகமாக உள்ளது. இந்நிலையில் இங்கு பாதுகாப்பின்மை என்பதைக் காரணம்காட்டி மேலதிகபோரபாய வரிவிதிப்பது நியாயமற்றதென்பதை, போரபாய மதிப்பீட்டுக்குழுவுக்கு விளக்குவதற்கே மேற்

[8 ஆம்பக்கம் பார்க்க

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# கேள்வி அறிவித்தல்

## பிரதம பொறியியலாளர் அலுவலகம் கட்டடங்கள் திணைக்களம் (மாகாணம்), யாழ்ப்பாணம்.

01; கீழ் வரும் வேலைகளுக்கான கேள்விகள் யாழ்ப்பாணம்' கட்டடங்கள் திணைக்கள பிரதம பொறியியலாளர் அலுவலக கேள்விச் சபையினரால் 2001ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 06ம்ஆம் திகதி வியாழக்கிழமை காலை 10-00 மணிவரை பிரதம பொறியியலாளர், கட்டடங்கள் திணைக்களத்தில் ஏற்றுக் கொள்ளப்படும். பெறப் பட்ட கேள்விகள் உடனடியாகத் திறக்கப்படும்;

02 நிர்மாணப் பயிற்சி நிறுவனத்தில் (ICTAD) இச்ராட் கட்டடங்கள் நிர்மாணிப்பதற்கு தரம் எம்-9 இலும் அல்லது அதற்கு மேல் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்கள் மட்டும் கேள்விப் பத்திரம் கோருவதற்குத் தகுதியுடையோராவார்;

03. ஒப்பந்தப் பத்திரங்களைப் பெறுவதற்கு முன்னர் நிர்மாணப் பயிற்சி நிறுவனத்தினரால் வழங்கப்பட்டதும், இற்றைவரை செய்யப்பட்ட வேலைகளின் விபரங்கள் அடங்கியதுமான பதிவுப் புத்தகத்தை நிறைவேற்றுப் பொறியியலாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

04; தகுதியுடையோர் மட்டும் உரிய கேள்விவைப்புப்பணத்தைச் செலுத்த அனுமதிக்கப்படுவர், வைப்புப்பணத்தை யாழ்ப்பாணம். கடற்கரை வீதியில் அமைந்துள்ள பிரதம பொறியியலாளர் அலுவலகத்தில் செலுத்திப் பற்றுச் சீட்டைப் பெற்று கேள்விப் பத்திரங்களை 2001ஆம் ஆண்டு ஆவணி மாதம் 31ஆம் திகதி பிற்பகல் 3-00 மணி வரை நிறைவேற்றுப் பொறியியலாளரிடம் இருந்து பெற்றுக்கொள்ளலாம்.

| வேலை விபரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்பணம் | மீளளிக்கப்படாத கேள்வி வைப்புப்பணம் |
|---|---|---|
| 1; ஊர்காவற்றுறை வைத்திய அதிகாரி அலுவலக திருத்த வேலை | ரூபா 3500/- | ரூபா 250/- |
| 2. பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் வைத்திய அதிகாரிகளுக்கான சுகாதார கல்விப் பிரிவு நிர்மாணித்தல் (கட்டடம் 1) | ரூபா 16000/- | ரூபா 500/- |

05; கேள்வி கோருபவர் ஒருவருக்கு ஒரு வேலைக்கு ஒரு தொகுதி ஆவணங்கள் மட்டுமே விநியோகிக்கப்படும்;

06; இவை தொடர்பான மேலதிக விபரங்களை நிறைவேற்று பொறியியலாளர், கட்டடங்கள் திணைக்களம்; யாழ்ப்பாணம் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்; மேலும் கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பரீட்சிக்கலாம்

பிரதம எந்திரி அலுவலகம்,
கட்டடங்கள் திணைக்களம்,
கடற்கரை வீதி,
யாழ்ப்பாணம்;

பிரதம பொறியியலாளர்.
யாழ்ப்பாணம்;

(C 2389)

தலைவராக....

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பு மாவட்ட நீதிபதி சுனில் ராஜபக்ஷ மேற்படி தீர்ப்பை வழங்கியுள்ளார்;

இதேவேளை ஹிஸ்புல்லா அணியைச் சேர்ந்த மேலும் 7 பேருக்கும் இத்தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது;

(ந-5)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
இலங்கை.

**முகாமைத்துவ கற்கையியல் வணிகபீடம் பரீட்சைகள் -2000**

தொழில் நிர்வாகமாணி பரீட்சை பகுதி II
வணிகமாணி பரீட்சை பகுதி II

மேற்குறிப்பிடப்பட்ட பரீட்சைகள் 3-09-2001 ஆம் ஆண்டு ஆரம்பமாகும். பரீட்சைக்கான அனுமதி அட்டையை 27-8-2001 இல் இருந்து பீடாதிபதி அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளவும்;

பதிவாளர்.

[கி-2390]

# வடபிராந்திய மக்கள் வங்கி விளையாட்டுக் கழகம்

## மாபெரும் சைக்கிள் ஓட்ட, மரதன் ஓட்டப்போட்டிகள்

மக்கள் வங்கியின் 40 வருட மக்கள் சேவையின் நிறைவினை கொண்டாடும் முகமாக எம்மால் நிகழ்த்தப்படும் நிகழ்வுகளின் ஒரு பகுதியாக மேற்படி போட்டிகள் நடத்தப் படுகின்றன.

### சைக்கிள் ஓட்டப்போட்டி

ஆண்கள், பெண்கள் என இருபாலாரிற்கும் தனித்தனியாக இப்போட்டி நடத்தப்படும் ஆண்களிற்கான சைக்கிளோட்டப்போட்டி 40 மைல்களையும், பெண்களிற்கான சைக்கிளோட்டப்போட்டி 8 மைல்களையும் கொண்டதாக அமையும்.

விண்ணப்ப முடிவு திகதி: 20. 08. 20υ1 நுழைவுக் கட்டணம்: ரூபா 100 மட்டும்

### மரதன் ஓட்டப்போட்டி

பாடசாலை மாணவர்களிற்கு (ஆண்கள்) மட்டுமான இப்போட்டி 7 மைல்களைக் கொண்டதாக அமையும். இப்போட்டிக்கானவிண்ணப்பப்படிவங்கள் பாடசாலை அதிபரின் சிபார்சுடன் அனுப்பப்படல் வேண்டும்.

விண்ணப்ப முடிவுதிகதி: 24. 08. 2001 நுழைவுக்கட்டணம்: ரூபா 15 மட்டும்

**குறிப்பு:**

மேற்குறிப்பிட்ட இரு போட்டிகளிற்குமான விண்ணப்பப்படிவங்களிற்கு கீழ் உள்ள முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

**மக்கள் வங்கி**

1. யாழ். ஸ்ரான்லி வீதிக் கிளை
2. யாழ்.கன்னாதிட்டிக் கிளை
3. சுன்னாகக்கிளை
4. பருத்தித்துறை விசேட கரும பீடம்

செயலாளர்

**வடபிராந்திய மக்கள் வங்கி விளையாட்டுக்கழகம்**

[கி-2388]

# விமானத்தளம் மீதான தாக்குதலுக்கு விடுதலைப்புலிகள் உரிமைகோரினர்

## பலியான புலிவீரர்களுக்கு அஞ்சலி

(கொழும்பு)

கடந்த ஜூலை 24 ஆம் திகதி அதிகாலை வேளை கட்டுநாயக்காவிமான நிலையம், விமானத்தளம் என்பவை மீது இடம்பெற்ற அதிரடித் தாக்குதலுக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் உரிமை கோரியுள்ளது.

விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் தமது இணையத் தளத்தில் ''விமானப்படைத் தளத்தின் வெற்றி'' என்ற தலைப்பில் வெளியிட்ட குறிப்பில் மேற்படி தாக்குதல் சம்பவத்தில் பலியான விடுதலைப்புலிகளுக்கு வீரவணக்கம் செலுத்தியிருப்பதாக கொழும்புத் தகவல்களை ஆதாரம் காட்டி இந்திய செய்தி நிறுவனம் ஒன்று இத்தகவலை வெளியிட்டுள்ளது.

மேற்படி சம்பவத்தில் 13 போராளிகள் மரணமடைந்திருப்பது ஏற்கனவே தெரிந்ததே.

இதேவேளை, கறுப்பு ஜூலையைநினைவு கூர்ந்து அல்லது வடக்கு-கிழக்கில் தமிழர் வாழும் பிரதேசங்களில் விமானப்படையினரின் கண்மூடித்தனமான தாக்குதலைக் கண்டித்து இடம்பெற்றுள்ளதாகக் கருதப்படும் இச் சம்பவத்தில் 7 பாதுகாப்புப் படையினர் கொல்லப்பட்டதுடன், பலநூறுகோடி ரூபா இழப்பு அரசிற்கு ஏற்பட்டமை குறிப்பிடத்தக்கது. (உ)

## கட்டுநாயக்கா விமானத்தள பாதுகாப்பை உறுதிப்படுத்த வெளிநாட்டு ஆலோசனை

(கொழும்பு)

கொழும்புத்துறைமுகத்தின் பாதுகாப்புக்கு ஏற்படுத்தப்பட்டுள்ள அச்சுறுத்தல்களை முடிவுக்கு கொண்டுவருவதற்கு வெளிநாடுகளின் நிபுணத்துவ ஆலோசனைகள் பெறப்படவுள்ளன.

கட்டுநாயக்கா விமானப் படைத் தள தாக்குதல்களை அடுத்து கொழும்புத் துறைமுகத்திற்குவரும் கப்பல்களின் கட்டணங்கள் அதிகரிக்கப் பட்டுள்ளதாலும், காப்புறுதிக் கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளதாலும், துறைமுகத்திற்கு பாதுகாப்பு அளிப்பதற்கு வெளிநாடுகளின் நிபுணத்துவம் பெறப்படவுள்ளது என்றும் கொழும்பு துறைமுக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (வ)

## விமானநிலைய தாக்குதல் அறிக்கை கையளிப்பு

(கொழும்பு)

கட்டுநாயக்கா விமானப் படைத்தளம், மற்றும் விமான நிலையம் மீதான தாக்குதல்கள் தொடர்பான முதற் கட்ட விசாரணை அறிக்கையை குற்றப் புலனாய்வுப் பிரிவினர் அரசிடம் சமர்ப்பித்துள்ளனர்.

இந்த விசாரணை அறிக்கையின்படி, இத்தாக்குதலுக்கு முன்பாக விடுதலைப்புலிகளின் இயக்க உறுப்பினர் ஒருவர் நீர்கொழும்புசந்தைப் பகுதியில் உணவுப்பொருட்களைக் கொள்வனவு செய்ததாக தெரியவந்துள்ளது.

இவ்விசாரணை அறிக்கையின் அடிப்படையில் மேலதிக விசாரணையை பொலிசார் மேற்கொண்டுள்ளனர். (ம

## சிற்பிக்கு கௌரவம்

(கோப்பாய்)

கோப்பாய் பலானை கண்ணகை அம்மன் ஆலய தேர் உற்சவத்தின் போது இளம் சிற்பக் கலைஞனான தியாகராசா பிரதீபன் மேற்படி ஆலய நிர்வாக சபையினரால் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார்.

66 மணிகளுடன் கூடிய திருக்கதவை இவர்வடிவமைத்ததுடன், பல ஆலயங்களுக்கு வாகனங்கள் பலவற்றையும் நிர்மாணித்தவர்என்பதுகுறிப்பிடத்தக்கது. (க- 79)

## இன்று கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வலயக் கல்விப்பணிப்பாளர்களுக்கான கூட்டம்ஒன்று இன்று பி.ப 2.00 மணிக்கு யாழ், கல்வி வலய கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இந் கூட்டத்தில் சகல வலயக் கல்வி அலுவலக நிர்வாக சேவைஉத்தியோகத்தர்களையும், கணக்காளர்களையும் கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-10)

### வயிற்றுப்புண்

வசர இரவு உணவை இரவு 7 மணியளவில் சாப்பிட்டு விடவேண்டும்.


உ



அருள்மிகு
லிங்கப் பிள்ளையார்
தேவஸ்தானம்
(பழம் பிள்ளையார்)

மஹோற்சவ விஞ்ஞாபனம்-2001

விநாயகர் அடியார்களே!

நிகழும் மங்களகரமான விஷு வருடம் ஆடித் திங்கள் 30ஆம் நாள் 15. 08. 2001 புதன் கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி


## நல்லூரான் திருவடிக்கு-21



### மனங்குளிரக் காணுவமே!

ஔவைக் கிழவிக் கருளுணர்த்திப் போந்தவனை
　ஆதிசிவன் புத்திரனை
கௌமாரம் கொள் முதன்மைக் கடவுளனை
　கணபதியின் தம்பியனை
சௌபாக்கிய மீயு நாயகனை, சீர்பெருகு
　நல்லூர்ப் பதியு றையும்
மௌலி புனைந்தானை யிடரழியக்
　மனங் குளிரக் காணுவமே

ஜெ. பிறேம்குமார்
கல்வயல்

### நன்று பெற வா குகா

சந்தனம் குங்குமம் புனுகுசவ் வாதுமலர்
　தந்துபன் னிருதோளிலே
தாங்குவாய் என்று நீ கோயில் கொண் டருளாட்சி
　தருகின்ற நல்லூரிலே
கந்தனே சிவகாமி மைந்தனே சண்முகா
　காவென்றுன் இரு தாளிலே
கண்டுதொழும் அடியவர் நன்றுபெற வாகுகா
　கைலைவா கனநாளிலே

குட்டித்தாத்தா
தனங்கிளப்பு

### வேதனைகள் நீக்கி ஆளுவாய்!

வள்ளி தெய்வ யானையம்மை வலமிடம்
　வாழ்த்திநிற்க அடியவர்கள் உம்மிடம்
புள்ளிமயில் உந்தனது இருப்பிடம்
　பொன் கொழிக்கும் நல்லையுந்தன் புகலிடம்
கள்ளமில்லா உள்ளமோடு வந்தனம்
　கருணைசெய்யா திருப்பதுதான் எங்ஙனம்
வெள்ளிமயில் ஏறிவரும் வேலனே
　வேதனைகள் நீக்கியெமை ஆளுவாய்!

நயினை இரத்தினசிங்கம்

### துன்பம் போக்காயோ

பண்பொடு கூடிய பல்பெரும் தெய் வம்சந்தன்
அன்பொடு நாளும்நாம் கை தொழக்- கண்பார்ப்பன்
நெஞ்சிற் கிடந்திடும் நஞ்சுநிகர் எண்ணங்கள்
துஞ்சி மறைந்திடக் காண

நா. நர்மதா
கொக்குவில்

### தீர்க்க வேண்டும் ஐயா

காலுங் கையுமின்றிக் கிடப்பாரும்
கதியற்றுத் தவிப்பாரும்
நோயுற்றுத் துடிப்பாரும்- மனம்
நெ ந்து கொதிப்பாரும்

### விநாயகர் அடியார்களே!

நிகழும் மங்களகரமான விஷு வருடம் ஆடித் திங்கள் 30ஆம் நாள் 15. 08. 2001 புதன் கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி பத்துத் திங்கள் உற்சவம் நடைபெறவிருப் பதால் அடியார்கள் லிங்க விநாயகப் பெரு மானை வழிபட்டு அருள் பெற்று உய்வீர்களாக.

உற்சவகால விபரம்

1 ம் நாள் 15. 8. 2001 கொடியேற்றம் காலை 10 மணி
8 ம் நாள் 22.8.2001 சப்பறத் திருவிழா மாலை 6.30 ,,
9 ம் நாள் 23.8.2001 தேர் உற்சவம் காலை 9 ,,
10 ம் நாள் 24.8.2001 தீர்த்தோற்சவம் காலை 8.30 ,,

மஹோற்சவ பிரதம குரு ஆகம கிரியா ஜோதி துவஜாரோகன துரந்தரர்

**சிவஸ்ரீ சதா மகாலிங்க சிவக் குருக்கள்**

(அரசடிப் பிள்ளையார் (அரசகேசரி)) தேவஸ்தானம் நாயன்மார்கட்டு)

தினமும் மாலை 6.00 மணி தொடக்கம் 7.00 மணி வரையும்

## தெய்வீகப் பேருரை

பொருள் : நாயன்மார்காட்டிய நெறி

நிகழ்த்துபவர்: திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகளின் பிரதமசீடன் பிரசங்க பூசணம் சுழிபுரம்

நடேசன் சிவசண்முகமூர்த்தி B. A

(வலிகாமம் கல்வி வலய ஆசிரிய ஆலோசகர்)

தேவஸ்தானம்

(3466)

விக்கப்பட்டுள்ளது. (உ-10)

### வயிற்றுப்புண்

வரை இரவு உணவை இரவு 7 மணியளவில் சாப்பிட்டு விடவேண்டும்.

எளிய யோகாசனப் பயிற்சி கள் பவன மூக்தாசனம் பத் மாசனம் வஜ்ராசனம், நாடி சுத்தி போனற பயிற்சிகளை தினமும் சில நிமிடங்கள் செய்துவர குடல் புண் விரை வில் சரியாகும். வயிற்றுப் புண், குடல் புண் முற்றிய நிலையில் தேங்காய் போன்ற உணவுகளை மருத்துவ ஆலோ சனைக்குப் பிறகே சாப்பிட லாம். கூடியவரை சாப்பிட்ட பின்பு குறைந்தது 15 நிமிடங் கள் கழித்தே தேவையான அளவு தண்ணீர் குடிக்க வேண்டும்.

சாப்பிட்ட உடன் மூளை சம்பந்தப்பட்ட வேலை அல் லது கடின உடல் உழைப்பு செய்வதை கண்டிப்பாக தவிர்க்க வேண்டும். உழைப் பும் ஜீரணமும் ஒரே நேரத் தில் நடக்காது.

சாப்பிட வேண்டிய உண வுகளை அமைதியாக அமர்ந்து நன்றாக அவசரம் இல்லாமல் மென்று உமிழ் நீர் சேர்த்து சாப்பிட வேண்டும். உமிழ் நீர் சேர்ந்த உணவுகள் இரைப்பை குடலுக்கு நன்மை தருகின்றன. வியாதிகளிலி ருந்து பாதுகாக்கின்றன. கோபமாக இருக்கும் போதும் மனது அமைதியற்று இருக் கும் போதும் சாப்பிடுவதைத் தவிர்க்க வேண்டும்.

## தீர்க்க வேண்டும் ஐயா

காலுங் கையுமின்றிக் கிடப்பாரும்
கதியற்றுத் தவிப்பாரும்
நோயுற்றுத் துடிப்பாரும்- மனம்
நொந்து கொதிப்பாரும்
பாலுக்கு அழுவாரும்
பசியினால் துடிப்பாரும்
கற்பிழந்து வாழ்விழந்து
கதறியழு வாரும் அவர்
இருக்குமிடம் வரவேண்டும்!
வேல் கொண்டு வினை தீர்க்க வேண்டுமையா

திருமதி மனோகரி ஜெகதீஸ்வரன்
மல்லாகம்

## வந்தெமக்கருள் செய்வாய்

சிறைதனில் இருந்து வாடிச்
சிந்தை நொந் தலறிச் சோர்ந்த
கறையி லிந்திரன் தன்னைக்
கருணையால் மீட்டாய் துங்கப்
பிறையணி பரம னார்தம்
பிரியநற் சுதனே ஆதி
மறைபுகழ் நல்லைக் கந்தா!
வந்தெமக் கருள் செய்வாயே

எம். கே. இளையப்பு

## உணர்வலைகள் காண்பீரோ!

தில்லைக் கூத்தன்
திருமகனைத் தொழுதிட்டால்
தொல்லை வினைகள்
தீர்த்திடுவார் திடமுண்மை
நல்லையை ஆள்பவனை
நாளுமே தொழுதமும்
எல்லையில் அடியர்தம்
உணர்வலைகள் காண்பீரோ

க. சுப்பிரமணியன்
ஆனைக்கோட்டை

# செய்தித் துளிகள்

## ஆறுபேர் கைதாகினர்

(கொழும்பு)

சட்டவிரோதமான முறையில் போலிக்கடவுச்சீட்டுடன் சைப்பிரசுக்குச்செல்லமுயன்ற ஆறுபேர் கட்டுநாயக்கா விமான நிலையத்தில்வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதான இரண்டு பெண்கள் உள்ளிட்ட ஆறு பேரும் சீன நாட்டைச் சேர்ந்தவர்களாவர்.

இவர்கள் நீர்கொழும்பு நீதிவான் முன்னிலையில் ஆஜர்செய்யப்பட்டபோது அவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான்உத்தரவிட்டுள்ளார். (ம)

## விபத்தில் மூவர்பலி

(கொழும்பு)

கொழும்பு தெமட்டகொட பகுதியில் இடம்பெற்றவாகன விபத்தொன்றில் 3பேர்கொல்லப்பட்டதுடன் 15 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

கடந்த சனிக்கிழமை மாலை இடம்பெற்ற இவ்விபத்துச் சம்பவத்தில் காயமடைந்தவர்கள் கொழும்பு தேசிய வைத்திய சாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ந-5)

## வாகன விபத்தில் 30 பேர்காயம்

(கொழும்பு)

பொத்துவில் பகுதியிலிருந்து கொழும்பு நோக்கி பயணம் செய்தபஸ் வண்டி ஒன்று விபத்துக்குள்ளாகியதில் முப்பது பேர் காயமடைந்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் நண்பகல் நடைபெற்ற இச்சம்பவத்தில் வீதியை விட்டு விலகியதாலேயே இவ்விபத்து நிகழ்ந்துள்ளதாக தெரிய வருகிறது.

காயமடைந்தவர்களின் மூன்று பேரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாகத் தெரியவருகிறது.

காயமடைந்தவர்கள் சிகிச்சைக்காக பொத்துவில் வைத்தியசாலையிலும், மொனறாகல வைத்தியசாலையிலும் அனுமதிக்கப்பட்டுள்ளன. (ந-4)

## கப்பல்பயணிகள் நேர்முகவிசாரணை நாட்கள்மாற்றம்

(திருமலை)

சிற்றிஒவ்றிங்கோபயணிகள் கப்பலில் திருமலையிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு செல்பவர்களுக்கான இராணுவத்தினரின் நேர்முகவிசாரணை அடுத்தவாரம்முதல் திங்கள், வெள்ளிஆகிய நாட்களில் பிற்பகல்2மணிமுதல்நடைபெறும் என திருமலை பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன

சிற்றி ஒவ் றிங்கோ பயணிகள்கப்பலுக்கான நேர்முக விசாரணை இதுவரை காலமும் சனிக்கிழமைகளிலும், செவ்வாய்க் கிழமைகளிலும் நடைபெற்றுவந்தமை குறிப்பிடத்தக்கது. (வ)

## ஐ.தே.க உபதலைவர் சாடல்

(கொழும்பு)

இலங்கை சுதந்திரமடைந்த பின்னர் ஜனாதிபதி சந்திரிகாவின்ஆட்சியிலேயே பொது மக்கள் மோசமான அழிவுகளைச் சந்தித்துள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் உபதலைவர் காமினி அத்துக்கோறள தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் அரசாங்கம் வெகு விரைவில் பொதுத் தேர்தல் ஒன்றை நடத்துவதன் மூலம் மக்கள் விரும்பும் அரசாங்கத்தை அமைக்க வழிவிட்டுக் கொடுக்க வேண்டும் என்றும் கேட்டுள்ளார்; (உ-5)

## இளம் அதிகாரியை நியமிக்கவும்

[ஊர்காவற்றுறை]

ஊர்காவற்றுறை மாவட்ட வைத்தியசாலைக்கு இளம் மாவட்ட வைத்திய அதிகாரியை நியமிக்குமாறு பொது அமைப்புகள் கோரிக்கை விடுத்துள்ளன.

தீவுப்பகுதி மக்களுக்கு மருத்துவ சேவையினை இம் மாவட்ட வைத்தியசாலை நிறைவேற்ற வேண்டியநிலையில் இருப்பதாலேயே இக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது

தற்பொழுது ஊர்காவற்றுறை மாவட்ட வைத்தியசாலையில் ஓய்வு பெற்ற ஒரு கிராமிய வைத்திய அதிகாரியே கடமையாற்றுவதுகுறிப்பிடத்தக்கது (க-75(

## கலாசாரப் பேரவை அங்குரார்ப்பணம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பிரதேச செயலக பிரிவுக்கான கலாசாரப் பேரவை அங்குரார்ப்பணம் நேற்று முன்தினம் யாழ். பிரதேச செயலர் செந்தில் நந்தனன் தலைமையில் ,பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

இப்பேரவைக்கான புதிய தலைவராக பிரதேச செயலர் செந்தில் நந்தனன் உபதலைவராக யாழ் கோட்டக் கல்வி அதிகாரி ராஜகோபால், செயலாளராக கலாசார உத்தியோகத்தர் தாட்சாயணி மகேந்திரன் ஆகியோர் தெரிவாகினர். (உ-4)

## நூல்கள் கொள்வனவு

(மல்லாகம்)

வலி தெற்கு பிரதேசசபைக்குட்பட்ட நூல் நிலையங்களுக்கு புதிதாக நூல்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.

சுன்னாகம், உடுவில் ஏழாலை நூல் நிலையங்களுக்கே இவ்வாறு நூல்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.

இவற்றுள் மாணவர்களுக்குப் பயன்படும் நூல்கள் அதிகமானவை என்பது குறிப்பிடத்தக்கது. (உ-122)

## தளபாடக் கொள்வனவிற்கு நிதி ஒதுக்கீடு

(உடுவில்)

உடுவில் கற்பொக்கணைப் பிள்ளையார் ஆலயத்திற்கு அண்மையில் அமைந்திருக்கும் கலைமதி சனசமூக நிலைய அறவழிப் பூங்காவிற்கான தளபாடக் கொள்வனவு, மற்றும் சிறுவர்களுக்கான விளையாட்டுச் சாதனங்கள் கொள்வனவுக்கென வடக்கு புனர்வாழ்வு,மரமைப்பு அமைச்சு ஒரு இலட்சத்து 60 ஆயிரம் ரூபா நிதியினை ஒதுக்கியுள்ளது; (உ-129)

## முயல்வேட்டைக் காரரின் தொல்லைஅதிகரிப்பு

கோப்பாய்)

கோப்பாய் இராசவீதிச் சந்தியை அண்டிய தோட்டப் பகுதிகளில் முயல் வேட்டைக்காரர்களின் தொல்லை அதிகரித்து வருவதாக விவசாயிகள் தரப்பில் கவலை தெரிவிக்கப்படுகிறது.

முயல் வேட்டைக்குச் செல்வோர் இப்பகுதிகளில் பயிரிடப்பட்டுள்ள வெங்காயம், குரக்கன் பயிர்கள் ஊடாகச் செல்வதால் இப்பயிர்கள் பாதிப்புறுவதாக விவசாயிகள் மேலும்தெரிவித்துள்ளனர்; (க-79)

# கருத்துக்கணிப்பு வாக்கெடுப்புஒத்திவைப்பு; ஜனாதிபதி சந்திரிகாவின் முடிவுக்கு சமாதானப் பேரவை பாராட்டு

(கொழும்பு

கருத்துக்கணிப்பு வாக்கெடுப்பை ஒத்திவைப்பது என்று ஜனாதிபதி தீர்மானித்த செயலானது இந் நாட்டில் ஜனநாயகம் தொழிற்படுவதையும், பொதுமக்கள் அபிப்பிராயத்திற்கு ஜனாதிபதி மதிப்பளிப்பதையும் காட்டி நிற்கிறது.

இவ்வாறு ஜனாதிபதி சந்திரிகாவின் அண்மைக்கால நடவடிக்கைகள் குறித்து தேசிய சமாதானப் பேரவை பாராட்டுத் தெரிவித்துள்ளது.

இது குறித்து சமாதானப் பேரவை விடுத்த அறிக்கையில் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது;

கருத்துக்கணிப்புடன் தொடர்புபட்டு எழுந்த அரசியற் பதற்ற நிலையை கலைந்து செல்ல வைத்தமையானது, இன்றைய இன மோதல் நிலையிலிருந்து மீளும் வழிவகைகள் பற்றி ஆராய்வதற்கு அரசியற் கட்சிகளுக்கு அவகாசம் கொடுத்ததாக அமையும்

அரசியற் கட்சிகள் இனப் பிரச்சினை விவகாரத்திலும், அதனை முடிவுக்கு கொண்டு வருவதில் மக்களுக்குள்ள ஆர்வத்திலும் கண்ணாயிருத்தல் வேண்டும்.

இனப்பிரச்சினை முடிவுக்கு வரு பட்சத்தில் அரசியற் கட்சிகளும் அச்சமின்றிச் செயற்பட முடிவதுடன், பொருளாதாரத்தையும் வளர்ச்சிப்பாதைக்கு இட்டுச் செல்லுதல் சாத்தியமாகும் (உ)

## திருநாள் திருப்பலி

(யாழ்ப்பாணம்)

நாவாந்துறைபுனித பரலோகமாதா ஆலயவருடாந்த திருவிழா கடந்த 6 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது

இன்று செவ்வாய்க் கிழமை நற்கருணை விழாவும், நாளை புதன் கிழமை காலை7.00 மணிக்கு திருநாள் திருப்பலியும் திருச் சொரூப பவனியும் ஆசீரும் இடம்பெறும் (செ)

## இராசிபலன்

14/8/2001
(ஆடி 29, செவ்வாய்)
தசமிமு இ 7 22 வரை
ரோகினி ந. ப 11 54 வரை
ராகுகாலம்-3.05-4 35
நல்லநேரம்-10.35-12. 05
ஆடிச்செவ்வாய்
அமிர்தசித்தம்

**மேடம்**
மாதர் உதவி, தனவிரயம், விவாதம், மேன்மை.

**இடபம்**
காரிய அனுகூலம், புதிய முயற்சி, செல்வாக்கு, சயன சுகம்.

**மிதுனம்**
களஸ்திரசுகம், பிரயாணம், சுபகாரியச்செலவு, மனக்குமுறல்.

**கடகம்**
சௌரவம், காரியம் கைகூடும்,பொருள்சேர்க்கை, உறவினர் சந்திப்பு

**சிங்கம்**
பணிவிடை, முயற்சி ஜெயம், தொழில்லாபம், சுபநிகழ்வு.

**கன்னி**
காரியநன்மை, பிரயாணம், மனஸ்தாபம், உடல் வியாதி.

**துலாம்**
உறவினர் வெறுப்பு, காரிய தடங்கல், பிரயாண பயம், உணர்ச்சிவசப்படல்.

**விருச்சிகம்**
உல்லாசம், முயற்சி கைகூடும், குடும்பசுகம், அபூவர் சந்திப்பு.

**தனுசு**
உடல்நலம், நல்லமுயற்சி, அதிகாரிகள் வெறுப்பு, பகைவரால் நன்மை.

**மகரம்**
முயற்சி இடையூறு, வியாபாரச் சிறப்பு, குடும்பக் கவலை, தாழ்வுநிலை.

**கும்பம்**
தன்னம்பிக்கைத் தளர்வு, ரோகபயம், கீர்த்தி, அரச நன்மை.

**மீனம்**
வாக்கு மேன்மை. நல்ல சம்பவம், கூட்டுமுயற்சி, காரிய நன்மை.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.)

-வளவன்

## வாக்கெடுப்புப் பணிகளில் ஈடுபட்ட ஊழியர்க்கு கொடுப்பனவு விரைவில்

(கொழும்பு)

சர்வஜன வாக்கெடுப்பு ஒத்திவைக்கப்பட்ட போதிலும் சர்வஜன வாக்கெடுப்பிற்கான ஆரம்பக்கட்டப் பணிகளில் ஈடுபட்டவர்களுக்கான கொடுப்பனவுகள் விரைவில் வழங்கப்படவுள்ளன.

இதனை கொழும்பு மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர் டபிள்யூ. கே. கே. குமாரசிறி தெரிவித்துள்ளார். (உ-5)

## ஒவ்வொரு மாதமும் 10 ஆம் திகதிக்கு முன் நிவாரணம்வழங்க பணிப்பு

(யாழ்ப்பாணம்)

இடம்பெயர்ந்தோர் உலர் உணவு நிவாரணம்ஒவ்வொரு மாதமும் 10 ஆம் திகதிக்கு முன்னர் வழங்கப்பட வேண்டுமென அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உத்தரவிட்டுள்ளார்

நேற்றுமுன்தினம் ஈ பி டி பியின் யாழ் மாவட்ட அலுவலகத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நடைபெற்ற பிரதேசசபை உறுப்பினர்கள் மற்றும் முக்கிய உறுப்பினர்கள் கலந்து கொண்ட கூட்டத்தில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

பொதுமக்களுக்கு வழங்கப்படும் நிவாரணம் தரமானவையா என்பதனையும் ஒழுங்காக விநியோகிக்கப்படுகின்றதா என்பதையும் கண்டறிவது அவசியம எனவும் அமைச்சர் வலியுறுத்தியுள்ளார். உ-5

## பயண அனுமதி வழங்கப்பட்டோர் விபரம்

ஆகஸ்ட் மாதம் 12 ,ஆம் திகதி வெளியிடப்பட்ட பட்டியலின்படி, வெளிமாவட்டங்களுக்குப்பயணம் செய்ய அனுமதிவழங்கப்பட்டவர்களின் இலக்கங்கள் பிரதேச ரீதியாகத் தரப்படுகின்றன.

### சாவகச்சேரி

| | |
|---|---|
| 161455 ஏ | 161455 பி |
| 161462 ஏ | 161462 பி |
| 161462 சி | |

### யாழ்ப்பாணம்

| | |
|---|---|
| 186052 ஏ | 186052 பி |
| 186322 ஏ | 189785 ஏ |
| 191019 ஏ | 191019 பி |
| 191019 சி | 191019 டி |
| 191019 ஈ | 195459 ஏ |
| 199885 ஏ | 199885 பி |
| 199885 சி | 199885 டி |
| 199915 ஏ | 200054 ஏ |
| 200054 பி | 200054 சி |
| 200054 டி | 202323 ஏ |
| 202323 பி | 202343 ஏ |
| 202343 பி | 202374 ஏ |
| 202374 பி | 202374 சி |
| 202374 டி | 202378 ஏ |
| 202413 ஏ | 202413 பி |
| 202419 ஏ | 202419 பி |
| 202484 ஏ | 202484 பி |
| 202484 சி | 202484 டி |
| 202484 ஈ | 202484எப் |
| 202539 ஏ | 202539 பி |
| 202539 சி | 202539 டி |
| 202569 ஏ | 202569 பி |
| 202569 சி | 202569 டி |
| 202569 ஈ | 202578 ஏ |
| 202578 பி | 202578 சி |
| 202578 டி | 202578 ஈ |
| 202586 ஏ | 202586 பி |
| 202607 ஏ | 202642 ஏ |
| 202642 பி | 202642 சி |
| 202642 டி | 202651 ஏ |
| 202685 ஏ | 202718 ஏ |
| 202727 ஏ | 202727 பி |
| 202727 சி | 202732 ஏ |
| 202748 ஏ | 202998 ஏ |
| 202998 பி | 202998 சி |
| 205043 ஏ | 205106 ஏ |
| 205134 ஏ | 205135 ஏ |
| 205244 ஏ | 205244 பி |
| 205262 ஏ | 205275 ஏ |
| 205275 பி | |

### கோப்பாய்

| | |
|---|---|
| 202479 ஏ | 202479 பி |
| 182886 ஏ | 182886 பி |
| 182886 சி | 204973 ஏ |
| 205024 ஏ | 205248 ஏ |
| 205248 பி | 206369 ஏ |
| 206369 பி | |

### நல்லூர்

| | |
|---|---|
| 107329 ஏ | 107329 பி |
| 107329 சி | 107329 டி |
| 107329 ஈ | 107329எப் |
| 107329 ஜி | 189779 ஏ |
| 189782 ஏ | 195585 ஏ |
| 195585 பி | 195585 சி |
| 195585 டி | 195585 ஈ |
| 197444 ஏ | 197444 பி |
| 197444 சி | 197444 டி |
| 202007 ஏ | 202007 பி |
| 202007 சி | 202289 ஏ |
| 202405 ஏ | 202405 பி |
| 202405 சி | 202492 ஏ |
| 202503 ஏ | 202503 பி |
| 202503 சி | 202562 ஏ |
| 202562 பி | 202562 சி |
| 202576 ஏ | 202576 பி |
| 202576 சி | 202577 ஏ |
| 202616 ஏ | 202616 பி |
| 202625 ஏ | 202625 பி |
| 202625 சி | 202637 ஏ |
| 202662 ஏ | 202662 பி |
| 202662 சி | 202695 ஏ |
| 205021 ஏ | 205113 ஏ |
| 205116 ஏ | 205138 ஏ |

## இன்று ஒரு தகவல்

# உடம்புக்கு உதவுங்கள்

இந்த உலகத்தில் தூங்கிக் கெட்டுப்போனவர்களும் உண்டு, தூங்காமல் கெட்டுப்போனவர்களும் உண்டு. விழித்துக்கொண்டிக்க வேண்டிய நேரத்தில் தூங்குவதும், தூங்கவேண்டிய நேரத்தில் விழித்திருப்பதும் தப்பு. ஒரு மளிகைக் கடைக்கு சாமான் வாங்கப் போகிறீர்கள். அங்கே உள்ள பையன் கொஞ்சம் காத்திருங்கள் ஐயா! முதலாளி தூங்குகிறார். விழித்ததும் உங்களுக்கு வேண்டியதை வாங்கிக் கொண்டு போகலாம் என்று சொன்னால் வியாபாரம் எப்படி நடக்கும்?

இரவு முழுவதும் தூங்காமல் விழித்துக் கொண்டிருந்துவிட்டு காலையில் புறப்பட்டு ' நான் கார் ஓடிக்கொண்டு கன்னியாகுமரிக்கு போகிறேன் என்று சொன்னால்...... அவர் என்ன கன்னியா குமரிக்கா போவார்? வேறே எங்கேயாவது போய் விடுவார். அமெரிக்காவில் நடந்த ஒரு ஆய்வின் படி சாலைவிபத்துக்கள் குறிப்பிட்ட சில நேரத்திலே தான் அதிகமாக நடக்கிறதாம். அதாவது அதிகாலை நேரம் 2மணியிலிருந்து 7 மணிவரையும் அதன் பின் மதியவேளை 2 மணியிலிருந்து 5மணிவரையும், ஏன் இப்படி?

சில விஞ்ஞானிகள் என்ன சொல்கிறார்களென்றால்...... மனித உடம்பில் இந்த நேரங்களில நரம்பு மண்டலங்களின் செயற்பாடு கொஞ்சம் குறைவாகவேயிருக்கும். அதனால் இந்தச் சமயங்களில் எந்த வேலை செய்தாலும் கவனக் குறைவு இருக்கும. தீர்மானம் எடுக்கிறதிறமையும் கொஞ்சம் குறைவாகத்தான் இருக்கும். மேற்கு ஜெர்மனியில் இரண்டு ஆராய்ச்சியாளர்கள் இவை பற்றிய சில விபரங்களைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். மதிய வேளைகளில் உடம்பின் உஷ்ணம் கொஞ்சம் குறையுமாம. அதாவது உடம்பு ஓய்வெடுப்பதற்குத் தயாராக இருக்கும் அதனால் அநத நேரத்தில் கொஞ்சம் ஓய்வு எடுக்கிறது நல்லது தான.

சரி... ஒரு மனிதன் எவ்வளவு நேரம் தூங்க வேண்

கவனிக்க வேண்டும். இவர்களுடைய சிவ்ற்வாரம் முழுவதும் ஒரே மாதிரியாக இருக்க வேண்டும் ஒரு ஒழுங்குமுறையாக வரவேண்டும, இன்று இரவுக் கடமைக்கு வந்தேன், அப்படியே இருந்து காலைக் கடமையையும் முடித்து விட்டுப் போய் விடுகிறேன் என்று சொல்லக் கூடாது. இதற்கு ஒரு விஞ்ஞானக் காரணம் இருக்கிறது. ஒவ்வொரு மனித உடம்பிலும் ஒரு மெக்கானிசம் இருக்கிறதனால் தான் குறிப்பிட்ட நேரத்தில் தூக்கம் வருகிறது. குறிப்பிட்ட நேரத்தில்விழிப்புவருகிறது.சிவ்ற்றை உங்கள இஷ்டப்படிமாற்றிக் கொண்டிருந்தால் உடம்பு மிகவும் கஷ்டப்படும், குறைந்தது ஒரு வாரத்துக்காவது ஒரே மாதிரி சிவ்ற்றில் இருந்தால் தான் உடம்பு அதற்கு ஈடு கொடுத்து மாற்றிக் கொள்வதற்கு வசதியாக இருக்கும், சிவ்ற் கூட முதலில் காலை பின் மதியம். அதன் பின் இரவு என்ற வரிசையில் மாற வேண்டும், அதுதான் நல்லது.

சிவ்ற் வேலை செய்கிறவர்களின்கவனத்திற்குச்சில குறிப்புக்களை விஞ்ஞானிகள் கொடுத்திருக்கிறார்கள், உடம்புக்கு தேவைப்படுகின்ற அளவுக்கு தூங்கவேண்டும், சத்துள்ள ஆகாரம் சாப்பிட வேண்டும், தவறாமல் உடற்பயிற்சி செய்ய வேண்டும், இரவில் கொழுப்புச் சத்துள்ள உணவு சாப்பிடக் கூடாது. ஏனென்றால் அந்நேரம் ஜீரண சக்தி குறைவாக இருக்கும், குறோனோகைசின் என்ற நேர ஒழுங்குமுறையை முக்கியமாக வாகன ஓட்டுநர்கள் கடைப்பிடிக்கவேண்டும். எவ்வளவோ விபத்துகளை இதன் மூலம் தடுத்து விடமுடியும்.

விடியற்காலை வேளை ஒரு பஸ் வேகமாகப் போய்க் கொண்டிருந்தது. அந்தபஸ்சில் தெய்வீகப பிரசாரம் செய்கிற ஒரு பெரியவரும் போய்க் கொண்டிருந்தார். திடீரென்று அந்த பஸ் ஒரு ஆற்றில் விழுந்து மூழ்கிவிட்டது. அந்த பஸ்சை ஓட்டியவர் சொர்க்கத்துக்குப் போய் விட்டார். பெரியவர் நரகத்

க.பொ.த. உயர்தரப் பரீட்சையில்

# குளறுபடி புரிந்த மாணவர்கள் அடையாளம் காணப்பட்டனர்

(கொழும்பு)

தற்பொழுது நடைபெற்றுக் கொண்டிருக்கும்க.பொ.த. (உ த) பரீட்சைக்கு தோற்றும் மாணவர் சிலர் பரீட்சை சட்டத்திற்கு முரணான விதத்தில் நடந்து கொள்வதாக பரீட்சை ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

கம்பஹா மாவட்டத்தில் அமைந்த பரீட்சை நிலையமொன்றில் கையடக்கத் தொலை பேசியினை பயன்படுத்தி வினாக்களுக்கு விடைகள் எழுத முற்பட்ட மாணவன் பரீட்சை மேற்பார்வையாளரினால் கண்டு பிடிக்கப்பட்டுள்ளான்.

இதேவேளை அம்மாவட்டத்தின் வேறு பரீட்சை நிலையங்களில்பரீட்சை மேற்பார்வையாளருக்கு அன்பளிப்புப் பொருட்கள் வழங்கி அவர்களிடமும், அருகிலுள்ள ஏனைய பரீட்சார்த்திகளிடமும் விடைகளை அறிய முற்பட்ட மாணவமாணவிகளும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இவர்கள் மீதான விசாரணையில் குற்றவாளிகள் எனக் கண்டறியப்பட்டால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனபரீட்சைஆணையாளர் தெரிவித்துள்ளார்.

(உ-7)

## நல்லூரில் இன்று

(யாழ்ப்பாணம்)

நல்லூர் முருகன் ஆலய உற்சவத்தையொட்டி இளங்கலைஞர் மன்றத்தினரால் தினமும் மாலை 6.00 மணி தொடக்கம் 7.15 மணிவரை நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் நடத்தப்படும் தெய்வீக இசையரங்கில் இன்று, ஸ்ரீ ரங்கராணி இராமச்சந்திரனின் பாட்டுக் கச்சேரி இடம்பெறவுள்ளது.

(சே)

---

## கம்பராமாயண சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

நல்லைக் கந்தன் உற்சவத்தை முன்னிட்டு நல்லூர் மேற்கு வீதி முத்துவிநாயகர் ஆலயத்தில் தினமும் மாலை 5.15 மணிக்கு இடம்பெற்று வரும் கம்பராமாயண சொற்பொழிவில் இன்று 'மாயமான்' என்ற தலைப்பில் சிவ. வை. நித்தியானந்த சர்மா சொற்பொழிவாற்றுவார்.

(செ)

---

## புராண இதிகாச சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

நல்லைக் கந்தன் உற்சவத்தை முன்னிட்டு ஆலய

## பொதுமக்களின் தேவைகளை நிறைவேற்ற அரசு தவறிவிட்டது

### சந்திரிகா அரசுமீது கண்டனம்

(கொழும்பு)

கடந்தகால அரசாங்கங்களைப்போன்றுபொதுஜன ஐக்கியமுன்னணி அரசும்மக்களின் தேவைகளை நிறைவேற்றத் தவறிவிட்டதாக பொதுஜன ஐக்கிய முன்னணி அரசின் அமைச்சர்மஹிந்தவிஜயசேகர குற்றம் சுமத்தியுள்ளார்.

அம்பாறையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற வைபவமொன்றில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

மக்களின் நலனை கருத்தில் கொண்டு பொதுஜன ஐக்கிய முன்னணி அரசும் ஐக்கிய தேசியக் கட்சியும் இணைந்து செயற்பட வேண்டுமெனவும் கோரிக்கை விடுத்துள்ளார்.

(உ-5)

## உலக வங்கிக்குழு இரண்டாவது முறையாக வடமராட்சி விஜயம்

(புலோலி)

உலகவங்கிக்குழு நாளை வடமராட்சிக்கு மீண்டும் விஜயம் செய்யவுள்ளது. தொண்டைமானாறு பாலத்தைப்பார்வையிடும் உலகவங்கிக்குழு மீனவர்களுடனும் விவசாயிகளுடனும் கலந்துரையாடல்களை நடத்தவுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை பருத்தித்துறை ஆரசினர்ஆதாரவைத்தியசாலைக்கு உலக வங்கிக் குழுசென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (உ-52)

## 5 லட்சம் செலவில் பருத்தித்துறையில் உணவு அரைக்கும் ஆலை

(புலோலி)

உழைக்கும மகளிர் அபிவிருத்தி நிறுவனம் சுமார் 5

...னந் நாவிலால் ஒதுக்கீடு செய்யபபட்டு வழங்கப்பட்டுள்ளது.

றார்கள். மதிய வேளைகளில் உடம்பின் உஷ்ணம் கொஞ்சம் குறையுமாம. அதாவது உடம்பு ஓய்வெடுப்பதற்குத் தயாராக இருக்கும் அதனால் அந்த நேரத்தில் கொஞ்சம் ஓய்வு எடுக்கிறது நல்லது தான.

சரி... ஒரு மனிதன் எவ்வளவு நேரம் தூங்க வேண்டும் என்பதற்கும் ஒரு அளவு உண்டு. பிறந்த குழந்தைகள் 18 லிருந்து 20 மணி நேரம் தூங்க வேண்டும். பள்ளிக்கூடம் போகிற குழந்தைகள் 12 லிருந்து 14 மணிநேரம் தூங்க வேண்டும். பள்ளிக்கூடத்திலல்ல: போய்விட்டு வந்ததன் பின்னர். பெரியவர்கள் 7 லிருந்து 9 மணி நேரம் தூங்கவேண்டும்.

பொதுவாக யாருக்குத் தூக்கம் கெட்டுப்போகிறது தெரியுமா? 'சிவ்ற்' வேலைசெய்கிறவர்களுக்குத்தான்: இரவு சிவ்ற் வேலை செய்து விட்டு காலை வீட்டிற்குப் போனவுடன் தூங்கமுடியாமல் பையை தூக்கிக் கொண்டு சந்தைக்கு ஓடுகிறவர்கள் எத்தனை பேர்? நாம் முன்னர் சொன்னதுபோல் நரம்பு மண்டலம் கொஞ்சம் குறைவாகச் செயல்படுகிற நேரங்களில் தான் மிகவும் சுறுசுறுப்பாக இருக்க வேண்டியிருக்கிறது.

என்ன செய்வது வாகனம் ஓட்டுகிறவர்கள் மிகவும் கவனமாக இருக்க வேண்டும். ஆராய்ச்சியாளர்கள் சொல்லியிருக்கிற யோசனைகளை முடிந்த அளவுக்கு கடைப்பிடிக்க வேண்டும். ஒன்று புரிந்து கொள்ளுங்கள், காலை வேளையில் ஒரு எட்டுமணி நேரம் தூங்குவதாகவைத்துக் கொள்ளுங்கள், அது இரவில் எட்டுமணிநேரம் தூங்குவதற்குச்சமம் என்று எடுத்துக் கொள்ளக் கூடாது,

சிவ்ற் டியூட்டிக் காரர்கள் இன்னொரு விஷயத்தையும் விடியற்காலை வேளை ஒரு பஸ் வேகமாகப் போய்க் கொண்டிருந்தது. அந்தபஸ்சில் தெய்வீகப பிரசாரம் செய்கிற ஒரு பெரியவரும் போய்க் கொண்டிருந்தார். திடீரென்று அந்த பஸ் ஒரு ஆற்றில் விழுந்து மூழ்கிவிட்டது. அந்த பஸ்சை ஓட்டியவர் சொர்க்கத்துக்குப் போய் விட்டார். பெரியவர் நரகத்திற்குப் போய் விட்டார். இது ஏன் இப்படியென்று யாருக்கும் புரிய வில்லை. அந்தப் பெரியவர் பொறுக்கமுடியாமல் கடவுளிடம் முறையிட்டார் கடவுளே இதுஎன்ன அநியாயம். நான் காலம்பூராவும் ஜனங்களுக்கு தெய்வீகப் பிரசாரம் செய்துகொண்டிருந்தேன், என்னாலேதான் பலர் உங்களை நினைக்கிறார்கள அப்படி இருக்க என்னை நரகத்துக்கு அனுப்பிவிட்டீர்கள். அந்த ஆள் தண்ணிபோட்டுவிட்டு கண் விழித்து வண்டியை ஓட்டி கவிழ்த்துவிட்டர் அவரைச் சொர்க்கத்துக்கு அனுப்பிவிட்டீர்கள் என்றுகேட்டார்;

அதற்கு கடவுள் பதில்சொன்னார். அப்படியில்லையப்பா, நீ பிரசங்கம் செய்கிறபோதெல்லாம், ஜனங்கள் கவலையே இல்லாமல் கண்ணை மூடி தூங்கிக்கொண்டிருப்பார்கள, ஆனால் அந்த ஆள் வண்டிஓட்டுகிற போது எல்லாம் அதில் பிரயாணம் செய்கிற அத்தனை பேரும் என்னையே பிரார்த்தனை செய்துகொண்டிருப்பார்கள். நல்ல விதமாகப் போய்ச்சேர வேணும் என்பதற்காக, உன்னைவிட அவர்தான் ஜனங்களுக்கு அடிக்கடி என் ஞாபகத்தை உண்டாக்கியவர். அதனால்தான் இப்படிச் செய்தேன் என்றார் கடவுள். □

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

மான்' என்ற தலைப்பில் சிவ. வை. நித்தியானந்த சர்மா சொற்பொழிவாற்றுவார்: (செ)

---

## புராண இதிகாச சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

நல்லைக் கந்தன் உற்சவத்தை முன்னிட்டு ஆலய முன்றலில் அமைந்துள்ள ஸ்ரீ மனோன்மணி அம்மன் ஆலயத்தில் தினமும் மாலை இடம்பெற்றுவரும் 'புராண இதிகாச முத்துக்கள்' என்னும் பேச்சுத் தொடரில் இன்று 'கந்தனுக்குரிய' விரதங்கள்' என்ற தலைப்பில் காரை கு. சிவராஜசர்மா சொற்பொழிவாற்றுவார். (செ)

---

## சமயச் சொற்பொழிவு

(யாழப்பாணம்)

நல்லைக் கந்தன் உற்சவத்தை முன்னிட்டு அறுபத்து மூன்று நாயன்மார் குருபூஜை மடத்தில் தினமும் பி. ப 2.00 மணிக்கு இடம்பெற்று வரும் சமய சொற்பொழிவில் இன்று 'ஆன்மீகத்தில் அரிவையர்' என்ற தலைப்பில் அ: ஆனந்தராஜா சொற்பொழிவாற்றுவார். (செ)

---

## ஆலயம் புனரமைப்பு

(உடுவில்)

நீண்டகாலமாக புனரமைப்புச் செய்யப்படாதிருந்த உடுவில் கற்பொக்கணைப் பிள்ளையார் ஆலயம் அண்மையில் பாலஸ்தாபனம் செய்யப்பட்டு திருப்பணிவேலைகள் நடைபெற்று வருகின்றன.

இப் புனருத்தாரணப்பணிக்கு 6 இலட்சம்ரூபா வினை வடக்கு புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சு வழங்கியுள்ளது: (உ-129)

## 5 லட்சம் செலவில் பருத்தித்துறையில் உணவு அரைக்கும் ஆலை

(புலோலி)

உழைக்கும மகளிர் அபிவிருத்தி நிறுவனம் சுமார் 5 இலட்சம் ரூபா செலவில் பருத்தித்துறையில் சத்துணவு அரைக்கும் ஆலையொன்றை அமைக்கவுள்ளது.

இதற்கான நிதி, அமைச்சர் டே. என். டக்ளஸ் தேவானந்தாவினால் ஒதுக்கீடு செய்யபபட்டு வழங்கப்பட்டுள்ளது.

இந்தஆலையை அமைக்கும் ஆரம்ப நடவடிக்கைகளை உழைக்கும் மகளிர் அபிவிருத்தி நிறுவனம் மேற்கொண்டுள்ளது. (உ-52,

## வட-கிழக்கு ஆசிரியர்கள் சம்பள நிலுவைகள் விரைவில் வழங்கப்படும்

(கொழும்பு)

வட-கிழக்கு மாகாண ஆசிரியர்களின் சம்பள நிலுவைகளை வெகு விரைவில் பெற்றுத் தருவதாக வட கிழக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை, இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் கே. பரமேஸ்வரன் தன்னைச் சந்தித்த ஆசிரியப் பிரதிநிதிகளிடம் உறுதியளித்துள்ளார்.

இதேவேளை, ஆசிரியர்களுக்கான பத்து அல்லது ஐந்து மாதக் கடன் வழங்க தற்போது நிதி இல்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார், (உ)

## கேக், மாச்சீனி அலங்காரக் கண்காட்சி நாளைமுதல் 5 தினங்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ். பெட்டா எசன்ஸ் ஆதரவில் யோகி மனைப் பொருளியல் அக்கடமி மாணவிகள் வழங்கும் கேக், மாச்சீனி அலங்காரக் கண்காட்சி நாளை மு ப 11.00 மணிக்கு இல; 75 அம்மன்வீதி யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள யோகி மனைப் பொருளியல் அக்கடமியில் ஆரம்பமாகவுள்ளது.

மேற்படி நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை கலந்துகொள்வார்.

இக் கண்காட்சி எதிர்வரும் 19 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமைவரை நடைபெறவுள்ளது. (உ)

# தி.மு.க. பேரணியில், வன்முறைகள் வெடித்தன

# ஐவர் பலி: 50 பேருக்கு மேல் காயமடைந்தனர்

(சென்னை)

திராவிட முன்னேற்றக் கழகம் சென்னையில் நடத்திய பேரணியில் ஏற்பட்ட வன்முறைக்கலவரத்தில்5பேர்பலியாகினர். 50ற்கும்மேற்பட்டோர் காயமடைந்தனர்.

முன்னாள் முதல்வர்மு.கருணாநிதி ஊழல் புரிந்ததாகக் குற்றம்சாட்டி காவல்துறையினர் வன்முறையில் அவரையும்,மத்திய அமைச்சர் முரசொலி மாறனையும் பாலுவையும் கைது செய்ததை ஆட்சேபித்து சென்னையில் நடைபெற்றபேரணியின் போதே மேற்படி சம்பவம் நடைபெற்றது.

சென்னை கடற்கரை வீதியால் வந்த பேரணி காந்தி சிலையைத் தாண்டி காவல் துறையின் ஆணையாளர் அலுவலகத்தை அண்மித்த போதேவன்முறைகள் வெடித்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

பேரணியினர் கோஷமிட்டுக் கொண்டு வந்தவேளை கட்டு மீறிய வார்த்தைகள் பிரயோகிக்கப்பட்டதால் ஆத்திரமடைந்த பொலிஸார் கும்பலைக் கலைக்க கண்ணீர் புகை குண்டு பிரயோகத்தினை மேற்கொண்டனர் பேரணியினர் காவல் துறையினரின் இரு வாகனங்களை அடித்து நொருக்கினர். பொறுமையிழந்த காவல் துறையினர் தடியடிப் பிரயோகம் செய்தனர் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

இந்தவன்முறையின்போதே மேற்படி அனர்த்தம் நிகழ்ந்தது

காவல் துறையினர் தரப்பில் உதவி ஆணையாளர் உட்பட 45 பேருக்கு பலத்த காயம் ஏற்பட்டுள்ளது.

இதேவேளை பத்திரிகை துறையைச் சேர்ந்தவர்களையும் காவல் துறையினர் தாக்கியதாகவும் படப்பிடிப்பாளர்கள் உட்பட 10 பேர் காயமடைந்ததாகவும் அவர்கள் பின் காவல் துறை அலுவலகத்தில் தடுத்து வைக்கப்பட்டார்களென்றும் தெரிவிக்கப்படுகிறது.

வன்முறைகளை முதலில் பொலிஸார் தொடக்கினார்களா? அல்லது பேரணியினர் தொடக்கினார்களா என்பது குறித்து பலத்த வாதப் பிரதிவாதங்கள் இடம் பெறுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது:

வன்முறையின் இறுதியில் நடைபெற்ற கூட்டத்தில் மு. கருணாநிதி பேசுகையில், இந்த பேரணிக் கலவரத்தை மத்திய அரசு விசாரிக்க உச்ச நீதிமன்ற நீதிபதி கொண்ட ஆணைக்குழுவை நியமிக்க வேண்டு என்று தெரிவித்தார்.

பேரணி வன்முறை பற்றி காவல் துறை ஆணையாளர் முத்துக்கறுப்பன் குறிப்பிடுகையில்,பேரணியினர் பொலிஸை கேவலமாகத் தூஷித்துகற்களை வீசி வாகனங்களைச் சேதப்படுத்தியதால் பொலிஸார் தடியடிப் பிரயோகம் செய்ய நேரிகட்டது என்று தெரிவித்தார். (து)

## இஸ்ரேலில் மற்றுமோர் தற்கொலைத் தாக்குதல் மூவர் பலி 50பேர் காயம்

(ஜெருசலேம்)

இஸ்ரேலில் இடம்பெற்ற மற்றுமோர் தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் குண்டுதாரி உட்பட பலஸ்தீனர் 3 பேர் பலியானதுடன் 50 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

கடந்த வியாழனன்று இடம்பெற்ற குண்டு வெடிப்பில் 15 இஸ்ரேலியர் கொல்லப்பட்டமைக்கு பழிவாங்கும் நோக்கில் பலஸ்தீனரின் முக்கிய இடமாகியஒறியன்றோல் பகுதியை இஸ்ரேல் கைப்பற்றியது.

இவ்விடத்தை விட்டுவெளியேறுமாறு உலகநாடுகள் பலவும் இஸ்ரேலுக்கு அழுத்தம் கொடுத்த போதிலும் இஸ்ரேல் தனது தாக்குல் நடவடிக்கையை தீவிரப்படுத்தியிருப்பதன் பின்னணியில் கைபாத்நகரில்இத்தற்கொலைக் குண்டுத் தாக்குதல் இடம்பெற்றதாக கூறப்படுகிறது. (உ-7)

## இந்திய மீனவர் மீதான சித்திரவதையை நிறுத்துக

(புதுடில்லி)

இலங்கைச் சிறையில்வாடும் இந்திய மீனவர்கள் மீதான சித்திரவதையை இலங்கையரசு உடனடியாக நிறுத்த வேண்டும் என்று இந்திய மத்தியஇளைஞர்நலம் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர்பொன்ராதா கிருஸ்ணன் கேட்டுள்ளார்.

நாகர் கோவிலில் நேற்று முன்தினம் செய்தியாளர் மகாநாட்டில் பேசும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர்மேலும் தெரிவிக்கையில்; புதுக்கோட்டை மாவட்டத்தைச் சேர்ந்த நான்கு மீனவரை இலங்கை அரசு உடனடியாக விடுதலை செய்யவேண்டும் என்றும் தமிழக கடற்பரப்பில் இந்திய மீனவர்கள் சுதந்திரமாக தமது தொழிலை மேற்கொள்ள பாதுகாப்புவழங்க வேண்டும் என்றும் கேட்டுள்ளார்.

இது தொடர்பாக கடிதமொன்றை மத்தியவெளியுறவு செயலருக்கு அனுப்பிவைத்துள்ளதாகவும் பொன்ராதா கிருஸ்ணன் தெரிவித்துள்ளார். (உ-4)

## தமிழக அரசிற்கு எதிராக மத்திய அரசு நடவடிக்கை

### முன்னாள் பாதுகாப்பு அமைச்சர்

(சென்னை)

மத்திய அரசு கோரியுள்ள ஆணையாளர்களை தமிழக மாநில அரசு விட மறுத்தால் தமிழக அரசுக்குஎதிராகத் தேவையான நடவடிக்கையை மத்திய அரசு எடுக்குமென்று முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ஜ் பெர்னாண்டஸ் தெரிவித்துள்ளார்.

சென்னையில் பத்திரிகையாளர்கள் கேட்ட கேள்வியொன்றிற்குப் பதிலளிக்கையிலே மேற்கண்டவாறு குறிப்பிட்டஅவர்,தொடர்ந்து கூறுகையில் ஜெயலலிதாவின் அரசை மத்திய அரசு ஒருபோதும் கலைக்க முற்படாது என்றும் தெரிவித்தார். (து)

## வியக்க வைக்கும் விந்தை நிகழ்வுகள்

★ A. m, P. m

பொதுவாக நாம் முற்பகலை குறிப்பதற்கு A. M என்றும் பிற்பகலைக் குறிப்பதற்கு P M என்றும் சரளமாக பயன்படுத்துகிறோம். ஆனால் இவற்றின்விரிவு பற்றி அறிந்துள்ளீர்களா? அறியவில்லையாயின் விடயத்துக்கு வாருங்கள் A M என்றால் Anti-Meridian P M என்றால் Post-Meryidian என்பதே இவற்றின் விரிவக்கம்.

★ காலம் காட்டும் ஆலயம்

இங்கிலாந்தில் உள்ள சிலிங்பரிக தீட்ரல் என்ற கிறிஸ்தவ ஆலயத்துக்கு எல்லா ஆலயங்களையும் விடவும் ஒரு தனித்தன்மை உண்டு.

இந்தக் கோவிலில் ஒருஆண்டுக்கு எத்தனைமாதங்கள் உண்டோ அத்தனை கதவுகள் உண்டு. ஒரு மாதத்தில் எத்தனை நாட்கள் உண்டோ அத்தனை ஜன்னல்கள் உண்டு!

ஒரு நாளில் எத்தனை மணித்தியாலயம் உண்டோ அத்தனை தூண்கள் உண்டு ஒரு மணிக்கு எந்தனை நிமிடங்கள் உண்டோ அத்தனை சொரூபங்கள் உண்டு ஒரு நிமிடத்தில் எத்தனை வினாடிகள் உண்டோ அத்தனை சிலுவைகள் உண்டு.

-அவதானி-

# நெருக்கடிகளின் மத்தியில் திணறும் தமிழக அரசு கலைஞர் கைதின் எதிரொலி அவலத்தையே ஏற்படுத்தும்

## வரலாறு காணா ஊர்வலம் உணர்த்துவதும் இதுவே!

கலைஞர் மு: கருணாநிதியும் மத்திய அமைச்சர்கள் முரசொலிமாறனும்டி.ஆர் பாலுவும் தமிழக காவல்துறையினரால் நள்ளிரவு பலாத்காரமாகக் கைது செய்யப்பட்டதும் தமிழகத்திலும் டில்லியிலும் பலவித கண்டனங்கள் எழுந்தன. பிரதமர் உட்பட பல அமைச்சர்கள் இக் கைது சம்பந்தமாக தமது அதிருப்தியை தமிழக அரசுக்குத்தெரிவித்தனர்.



இதன் பின்னணியில் தமிழக காவல் துறையினர் மூவர் டில்லிக்கு மாற்றப்பட்டனர். கண்டனங்களைக் கண்ட முதல்வர் ஜெயலலிதா தனிநபர் கமிஷன் ஒன்றையும் விசாரணைக்காக நியமித்தார். மத்திய அரசின் தமிழக காவல்துறை மாற்றத்தை அசட்டை செய்த தமிழக முதல்வர் ஜெயலலிதா அவர்களை அனுப்ப முடியாதென மத்திய அரசுக்கு அச்சொட்டாக அடித்துச் சொல்லிவிட்டார்.

கலைஞர் கருணாநிதியும் தனிநபர் கமிஷன்விசாரணையை ஏற்றுக்கொள்ள மாட்டேன் என்று பிடிவாதமாகச்சொல்லிவிட்டார். இரு மாதங்களேபதவியை வகித்து வந்த நிலையில் தமிழக அரசு கலைக்கப்பட்டுவிடும் என்றும் பரவலாகப் பேசப்பட்டது:

ஆனால் அப்படி ஒன்றும் நடந்து விடவில்லை: 'நித்திய கண்டம் பூரண ஆயுள்' என்ற நிலையிலேயே தமிழக அரசு காலத்தை எதிர் நோக்கி வருகிறது.

### அரசியல் சாணக்கியம் மிக்கவர்

கலைஞர் கருணாநிதி அரசியல் சாணக்கியம் மிக்கவர். அரசியல் அனுபவத்தில் பழமும் தின்று கொட்டையும் போட்டவர். மெல்ல மெல்ல தமிழக அரசுக்கு நெருக்கடிகளைக் கொடுத்துவருகிறார்.

மத்திய அரசில் தி.மு.க பங்காளியாக இருக்கும்வரை அவர் மதியூகம் பூரண நிலவாகப் பொழியும் என்பதில் ஆச்சரியப்பட எதுவுமில்லை.

தமிழகத்தில் கருணாநிதி கைதான செய்தி அலை ஒய்ந்துவிட்டதோ என மக்கள் எண்ணிக்கொண்டிருந்த போது 12 08.2001 ஞாயிறு தமிழகமெங்கும் எழுச்சியுடன் மாபெரும் கண்டனஊர்வலம் தமிழக அரசுக்கெதிராகத் திரண்டது. இளைஞர் அணித் தலைவர் கலைஞரின் மகன் மு.க. ஸ்டாலின் தலைமையில் எதிர்ப்புஆர்ப்பாட்ட ஊர்வலம் நடத்தப்பட்டது. அன்றைய தினம் மத்திய முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ஜ் பெர்னாண்டஸும் தமிழகம் வந்திருந்தார்.

### புத்தொளி

சமீப காலத்தில் தமிழகத்தில் இப்படி ஒரு எதிர்ப்புப் பேரணி ஒன்று நடந்ததில்லை என பத்திரிகைகள் செய்தி வெளியிட்டன.

பத்து மைல் ஊர்வலம்; பல்லாயிரக்கணக்கான தி.மு.க தொண்டர்கள் அரசுக்கெதிரான கோஷங்களை எழுப்பிக் கொண்டு பவனி வந்தனர்.

ஊர்வலம் ஒரு இடத்தைக் கடக்க சுமார் மூன்று மணி நேரம் எடுத்தது: தமிழக காவல் துறையினர் ஒன்று திரண்டு பாதுகாப்பைப் பலப்படுத்தினர். அசம்பாவிதங்கள் நடந்து விடுமோ என அஞ்சி காவல் துறையினர் குவிக்கப்பட்டனர்.

ஆரம்பத்தில் அமைதியாக நடந்த ஊர்வலம் மெரினா கடற்கரையை அண்மித்த போது பல்வேறு அசம்பாவிதங்களைச் சந்தித்தது.மெரினாக் கடற்கரைக்கு மேற்குப் புறமாக தலைமைக் காவல் துறை ஆணையாளர் அலுவலகம் இருக்கிறது. அங்கு திரண்ட மக்கள் தமிழக அரசுக் கெதிராகவும், காவல் துறைக்கெதிராகவும் கோஷங்களை எழுப்பினர்.

இதன் காரணமாக காவல் துறையினருக்கும் ஊர்வலத்தில் சென்றோருக்குமிடையே கடும் வாக்குவாதங்களும், சராமாரியாக கல்வீச்சு, செருப்பு எறிதல் என சம்பவங்கள் தொடராக நடந்தேறின.

### அமைதியின்மை

எங்கும் அமைதியின்மை ஏற்பட்டபோதும் லட்சோப லட்சமக்கள் சென்னை மெரினாக் கடற்கரையில் ஒன்று திரண்டு கண்டனக் கூட்டத்தை நடத்தினர். தி.மு.க அமைச்சரவையில் இருந்த பலர் தமிழக அரசைக் கண்டித்து பேசினர்.ஜெயலலிதா அரசு நீடிக்கப்போவதில்லை என கூறினர். ஆவேசமாகப் பேசிய தலைவர்களின் பேச்சைக் கேட்டமக்கள் உணர்ச்சிவசப்பட்டு கூட்டமுடிவில் காவல்துறையினரைத் தாக்கினர். இதனால் பெரும் நெரிசல் ஏற்பட்டு நூற்றுக்கு மேற்பட்டோர் படுகாய முற்றனர்.பொலிஸார் 50க்கு மேல் காயமுற்றனர்.

தமிழகம் வருகை தந்த முன்னாள்பாதுகாப்பு அமைச்சரும் தேசியஜனநாயக கூட்டணி ஒருங்கிணைப்புத் தலைவருமான ஜோர்ஜ் பெர்ணாண்டஸ் தமிழக அரசு காவல்துறையினரை மத்திய அரசுக்கு மாற்றாவிட்டால், மத்திய அரசு கடும் நடவடிக்கைஎடுக்குமென பத்திரிகையாளருக்குத் தெரிவித்துள்ளார்.

மாநில அரசு மத்திய அரசுடன் சுமுக உறவுவைத்திருக்க வேண்டியது அவசியம்:இதன் அடிப்படையில் தமிழக அரசு தனதுபிடிவாதத்தைத்தளர்த்தவும் கூடும்.

எது எப்படியானாலும்தமிழக அரசுஎதிர்காலத்தில் பல நெருக்கடிகளைச் சந்திக்கத் தயாராக இருக்க வேண்டும் தி.மு.க தலைவர் தமிழக அரசுக்கு எப்போதும் பெரும் அச்சுறுத்தலாகவே இருப்பார் இதில் சந்தேகமில்லை.

ஆற்றின் வருந்தா வருத்தம்
பலர் நின்று போற்றினும்
பொத்துப் படும்

குறள்

# வலம்புரி

## ஜனாதிபதியின் தப்புக்கணக்கு

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கா சமாதான முயற்சிகளைக் குழப்பாமலிருந்தால் தமிழ் மக்கள் புலிகளின் தலைவர் பிரபாகரனை நிராகரித்திருப்பார்கள் என ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா கூறியுள்ளார் ஜனாதிபதியின் இக் கூற்று அவர் போட்ட தப்புக் கணக்கையே சுட்டி நிற்கிறது. விடுதலைப்புலிகளுடன் பேசுவதற்குத் தான் தயாராக இருப்பதாக, தமிழர் விடுதலைக் கூட்டணியிடம் தெரிவித்த ஜனாதிபதியின் மேற்போந்த கூற்று அவரின் உள்நோக்கை வெளிப்படையாகவே காட்டி விட்டது.

சமாதானத்தை ஏற்படுத்துவதன் மூலம் விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனையும் தமிழ் மக்களையும் வேறுபடுத்திவிட முடியுமென்பது ஜனாதிபதியின் கற்பனை. அக்கற்பனை நிறைவேறுமென்றகோதாவிலேயே அவரின் சமாதான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதை இப்போது புரிந்து கொள்ள முடிகிறது.

தலைவர் பிரபாகரனையும், தமிழ் மக்களையும் பிரிப்பதென்பது பூவையும் மணத்தையும்பிரிப்பதற்கு ஒப்பானதாகும். விடுதலைப்புலிகளுக்கும் தமிழ் மக்களுக்கு மிடையேயான உறவு உடலுக்கும் உயிருக்குமுள்ள தொடர்பு என்பது மறுக்க முடியாத உண்மை. இவ் உண்மை சில வேளைகளில் கசப்பாக இருப்பினும், உள்ளது இல்லதாகாது, இல்லது உள்ளதாகாது என்ற சர்க்காரிய வாதத்தின் அடிப்படையில் உண்மையை மறைப்பதனால், மறுப்பதனால் விளைவுகள் எதிரானதாக அமையுமென்பதை ஏற்றுக்கொள்வதே அறிவார் தொழிலாகும்.

தலைவர் பிரபாகரனுடன் பேச்சு நடத்துவதை நிறுத்த வேண்டுமென்று ஜே.வி.பி.ஜனாதிபதியிடம் விடுத்த கோரிக்கையும், ஜனாதிபதியின் உள்ளக்கிடக்கையை அறிந்தே விடப்பட்டுள்ளது என எண்ணத் தோன்றுகிறது.

புலிகளுடன் பேசுவதன் மூலமே இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண முடியுமென்ற உண்மையை உலகம் முழுவதும் உணர்ந்துள்ள போதிலும் இலங்கையின் ஆட்சிப்பீடத்தில் இருக்கின்ற தலைவர்கள் புரிந்து கொள்ள முடியவில்லையெனில் அது அறிவின் பற்றாக்குறையையே வெளிப்படுத்தும்.

# வயிற்றுப்புண், குடற்புண்களை ஏற்படுத்தும்
# தவறான உணவுகளைத் தவிர்க்க வேண்டும்

## மருத்துவ விளக்கம்

**டாக்டர் இரத்தின சக்திவேல்**
இயற்கை மருத்துவர்

பசிவந்திடப்பத்தும்பறந்து போகும் என்பது பழைய செய்தி. உடலை உருக்கும் பிணிகள் வந்திட உள்ளமும் நோகும். வாழ்வின் வசந்தம் எட்டாக்கனி ஆகிவிடும். இன்றைய புரட்சி விஞ்ஞான அவசர உலகத்தில் வேலைக்குப் போகும் வர்க்கத்தில் இருந்து இன்னும் சமையற் கட்டுக்குள் பெட்டிப்பாம்பாய் மாய்ந்து கொண்டிருக்கும் பெண்கள் வரை பலதரப்பட்ட வியாதிகளுக்கும் பரம்பரை வியாதி என முத்திரை குத்தப்பட்டு நாள்தோறும் தடை செய்யப்பட்ட பல மாத்திரைகளுடன் அவதியுறுகின்றனர்.

அதிலும் குறிப்பாக பலருக்கு வயிற்றுப்புண், குடற்புண் நோய் உள்ளது வயிற்றுப்புண்ணுக்கு குறிப்பிட்ட நேரத்தில்உணவுஉண்ணாதது தான் காரணம்என தவறாகப் பிரசாரம் செய்யப்படுகிறது. உண்மையில் அதற்கான காரணம் என்ன? உண்ட உணவுகள் செரிக்கும் முன்பு சாப்பிடுபவன் மனிதன் மட்டுமே. இதுவா ஆறறிவு? பிறவிலங்குகளெல்லாம் பசித்த பின்பு தமது உணவைத்தேடி அலைந்து சாப்பிட ஆரம்பிக்கின்றன. ஆனால் மனிதன் மட்டும் பசிக்கும் முன்பே சமைத்த (செத்த) உணவுகளை உப்பு, புளி, ஊறுகாய், மிளகாய் போன்ற உணவுகளை அளவுக்கு மீறி உண்டு தேவையற்ற குடல் புண் வியாதியை உண்டு பண்ணிக் கொள்கிறான்.

### இரைப்பை

வாயில் சாப்பிடும் உணவு நன்றாக மென்று உமிழ்நீர் சுரந்து உணவுடன் கலக்கப்படும் முன்பே உணவை விழுங்கி இரைப்பையில் சுரக்கும் நீர்களோடு உணவு கலக்கிறது. இரைப்பையின் உட்புறச் சுவர்கள் மிகுதியான உப்பு, மிளகாயாலும், உமிழ்நீர் சரியாக கலக்காததாலும் இரைப்பையில் உணவுகள் ஜீரணம் ஆகாமல் வயிற்றுப்புண், வயிற்றுவலி, பசிமாந்தம், வாந்தி, புளியேப்பம் போன்றவைகள் உருவாகின்றன.

### குடல்கள்

இப்படிச்சரியாகசெரிக்காத மிளகாய் மிகுந்த மசாலா உணவுகள் சிறுகுடல், பெருங்குடல்களையும் கடக்கும் போது, ஒரு வழி பண்ணி, சிறுகுடலிலும் புண்ணை உற்பத்திசெய்து விடுகிறது. மேலும் தவறான உணவுகளால், உணவுகளில் அதிகமான கழிவு ஏற்பட்டு குடலுடன் ஒட்டி தீராத மலச்சிக்கலை உண்டுபண்ண குடற் புண்ணும் ஏற்படுகிறது.

### வலியின்தன்மை

இப்புண்களினால் சிலருக்கு சாப்பிடும் முன்போ, சாப்பிடும் போதோ, சாப்பிட்ட பிறகோ வயிறு வலிக்கும். சிலருக்கு சாப்பிட்ட பின்பு வாந்தி வருவது போல் தோன்றும் சிலருக்கு அதிகமாகச் சாப்பிடமுடியாமல், அதனால் உடல் தெம்பு குறைந்து அவதிப்படுவர். தொடர்ச்சியாகப் பிறவியாதிகளுக்குப், இரசாயன மருந்துகள சாப்பிட்டு இருந்தாலும் அதன் காரணமாகவும் குடல்புண் ஏற்படும் வயிற்றுக் குடல் பகுதிகளில் பூச்சிகளின் புழுக்களின் தாக்கத்தாலும் இரத்தசோகை, உடல் அசதி, குடல் புண்வலி ஏற்படும், வயிற்றுவலி ஏற்படும் போது அதன் கொடுமை சொல்ல இயலாது. தாங்கஇயலாது. பலருக்குப் பணம் செலவழித்தும் விமோசனம் இல்லை என்ற மன ஆதங்கமும், சேர்ந்துசிலர்வலிக்கொடுமையால் வாழ்வின் கடைசி அத்தியாயத்துக்குச் சென்று அவசரப்பட்டு உயிரைமாய்த்துக் கொள்ள முயற்சிக்கும் மூடர்களாக ஆவதும் உண்டு.

இதற்கு உண்மையான தீர்வு உண்டா? உண்டு. ஏன், எதற்கு என்ற புள்ளி விபரங்கள் நோய்களைத் தீர்க்க உதவுவதில்லை; உடனடித் தேவை நிவாரணம். பலமருத்துவத்துறையிலும் பலமடங்கு பணம் செலவழித்தும் பலன் கிட்டாமல் வயிற்றுப்புண், குடல் புண் வியாதியால் அவதியுறும் அன்பர்கள் நம்பிக்கையுடன் நலம் நிச்சயம் உண்டு என்ற வைராக்கியத்துடன் இங்கே கொடுத்துள்ள வழி முறைகளைக் கடைப்பிடித்தால் கைமேல் பலன் உண்டு பூரண நிவாரணம் கிட்டும். 'மருந்தெனெ வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது அற்றது போற்றிஉணின்' என வள்ளுவர் கூறுகின்றார். அதாவது உண்ட உணவு செரித்த பின்பு சாப்பிட்டால் மாத்திரைகள் தேவை இல்லை.

### குடற் புண்ணால் கஷ்டப் படுபவர்கள் தவிர்க்க வேண்டியவைகள்

1. காலை எழுந்தவுடன் குடிக்கும் சூடான காபி, ரீ போன்றலாகிரிப் பானங்கள்.
2. எண்ணெயில் பொரித்த வறுத்த பதார்த்தங்கள், ஊறுகாய்டப்பா உணவுகள்பதப்படுத்தப் பட்ட உணவுகள், புளிக்கும் அமிலஉணவுகள் மற்றும் லாகிரி வஸ்துக்கள்.
3. குடல் புண்முற்றியநிலையிலுள்ளவர்கள் சமைத்த கீரைகளையும்தவிர்த்தல் வேண்டும்.
4. இரவில். பால், தயிர், பால்பொருட்கள்:
5. சாப்பிடும் வேளையில் கண்டிப்பாக இடையிடையே தண்ணீர் குடிக்கக்கூடாது.
6. உப்பு, புளி, மிளகாய் முடிந்தவரை தவிர்க்க வேண்டும்.
7. கண்டிப்பாக நன்றாகப் பசித்த பின்பே சாப்பிட ஆரம்பிக்கவேண்டும்.
8. இரவுவெகுநேரம்விழித்து இருத்தல் கூடாது:
9. மிகவும், சூடாகவோ, குளிராகவோ எந்தஉணவும் சாப்பிடக்கூடாது:
10. மலச்சிக்கல் இருந்தால் அதை நிவர்த்தி செய்தல் வேண்டும்.

### குடற்புண்ணுக்குமூலகாரணம் மலச்சிக்கலே

நாம் தவறான உணவுகளான புளிப்பு மிகுந்த அமில உணவுகள் அதிகம் சாப்பிடுவதாலும், பசிக்கும் முன்உணவுகள்சாப்பிடுவதாலும், உணவுகளை நன்றாக மெல்லாமல் உமிழ் நீர் சேர்க்காமல் வயிற்றில் தள்ளுவதால், விழுங்குவதால் உணவுகள் இரைப்பையில் சரியானமுறையில் சீரணமாகாமல் இரைப்பையில் உள்ளதிசுக்கள் கெடுவதுடன் சிறுகுடலையும் பாதித்து அதன் மிருதுத்தன்மைகுறைந்த. நரம்புகள் பலம்குறைந்து சரியான முறையில் வேலை செய்யாமல், உணவுக்கழிவுகள் வெளியேறாமல் குடல் புண்களாவதுடன் இரத்தம் அசுத்தமடைந்து அமிலத்தன்மையாகி மற்ற பல வியாதிகளுக்கும் வழி கோலுகிறது. பலருக்கும் காலையில்எழுந்தவுடன் மலம் வெளியேறுவதில்லை. மலம் வெளியேறாமல் மனிதன் தண்ணீரைத் தவிர வேறு எந்த உணவும் சாப்பிடத்தகுதியற்றவன் என்பதை அறிபவர் யார்?.

### காலையில் (பெட்) காபி படுக்கையில் தள்ளும்

மலச்சிக்கல், இரைப்பை புண், குடல் புண்ணால் அவதியுறும் உடலுக்கும், வயிற்றுக்கும் காலையில் எழுந்தவுடன் கண்டிப்பாக சூடான ஆகாரம் தரக்கூடாது. ஏன்? சாப்பிட்ட உணவுகள் செரிப்பதற்காக இரவு முழுவதும் வயிற்று உறுப்புகள் மற்ற உறுப்புகளைவிட அதிக அளவில் பணி செய்வதால், இரைப்பை, குடல் ஆகியவற்றைச்சுற்றியுள்ள தசைக்கோளங்கள் அளவுக்கு மீறிய வெப்ப நிலையில் உள்ளன. எனவே, அந் நிலையில் எழுந்தவுடன் காபி, டீ போன்ற சூடான லாகிரி பானங்களை அருந்துவது மனிதன் தனக்குத்தானே சவக்குழி வெட்டி தற்கொலைக்கு ஆயத்தமாகிறான் என்பதாகும். குடற்புண் ஆக்குவதும் அதுவே. காலை காப்பி கவலையின் ஆரம்பம் என்பது உண்மையே

### வயிற்றுப் புண், குடற் புண் சரியாக வழிமுறைகள்

குடற் புண்ணிற்கு மூலகாரணமான மலச்சிக்கலை விரட்ட காலையில் எழுந்தவுடன் 3 முதல் 4 டம்ளர் வரை தண்ணீர் குடிக்க வேண்டும். நொந்து போன வயிறும், குடலும் தெம்பு பெறும் மிகக் கடுமையான மலச்சிக்கலாக இருந்தால் அகிம்சை எனிமா கொடுக்கலாம், இரவில் ஒரு தேக்கரண்டி திரிபலா சூரணம் சாப்பிடலாம். இரவில் திராட்சை, வாழைப்பழம், பப்பாளி போன்ற பழங்கள் சாப்பிடலாம், காலையில் காபி, டீக்குப் பதிலாக ஏதேனும் பச்சைக் கீரைச் சாறுகள், வெள்ளைச் சீனி சேர்க்காத பழச்சாறு அல்லது உயிரூட்டிய தானியச் சாறு (முளைக்கவைத்து) இவற்றில் ஒன்றைச் சாப்பிட்டு உடல் நலம் பெறலாம்.

சமைத்த உணவுகளெல்லாம் அமில உணவுகள். புளிக்கக்கூடியவை. உடலுக்குக் கெடுதல் தரக்கூடியவை. எனவே, இட்லி, தோசை, பூரி போன்ற உணவுகளை குறைத்து, சாப்பிடும் முன் கனிந்த பழங்களும் சமைக்காத காய் கறிகளும் சாப்பிட்டால் குடல் புண் அதிவிரைவில் குணமடையும். இதில் மாயம் ஒன்று மில்லை. வயிற்றுப் புண், குடல் புண்ணைக் குணப்படுத்தும் உணவுகளைப் பயன் படுத்தவும் உணவு மாற்றம் உடனடி தேவை. கார உணவுகள் அற்புத உணவுகள், மணத்தக்காளி, கீரை, வெந்தயக் கீரை, முருங்கைக் கீரை வெண் பூசணிச்சாறு, சோற்றுக் கற்றாழை, நெல்லி, வாழைத்தண்டுக்காஸ், கரட், அறுகம்புல்லுச்சாறு, பசங்காய் கறிக் கலவை, வாழைப்பழம், வெள்ளரி, திராட்சை, அப்பிள், ஆரஞ்சு, சொய்யா, சீதாப்பழம், பீர்க்கு, புடல் போன்ற சஞ்சீவி உணவுகளை சாப்பாட்டில் அதிகம் சேர்த்தால் ஒரு வாரத்தில் மிகப் பெரிய மாறுதலை அடையலாம். கீரைகளை பச்சையாகச் சாறு எடுத்து சாப்பிட இயலாதவர்கள் வெந்தயத்தை முளைகட்டிகாய வைத்துள்ள பொடி போன்றவைகளைச் சேர்த்துக் கொள்ள வேண்டும். மேலும் சாப்பி, டீக்கு பதிலாக முளை கட்டிய தானியங்களைக் காயவைத்துச் சத்து மாவுதயார் செய்து கஞ்சி ஆக்கிச் சாப்பிடலாம். பிற இயற்கை நல உணவு வகைகள் பற்றி அறிந்து கடைப்பிடித்து குடல் புண்களில் இருந்து பூரண விடுதலை பெறலாம்.

பிற மருத்துவத்துறையில் நேரம் தவறாமல் சாப்பிடச் சொல்லி வற்புறுத்தப்படுகிறது. ஆனால் நிரந்தர உடல் நலம் நாடுபவர்கள் நன்றாகப் பசித்த பின்புதான் எந்த உணவாக இருந்தாலும் சாப்பிட ஆரம்பிக்க வேண்டும். குடல் புண், வயிற்றுப் புண் வலியின் கடுமை குறையும் வரை திட உணவுகளைத் தவிர்த்து, திரவ உணவுகளான பழச்சாறுகள். காய் கறி சாறுகள் போன்றவற்றை அதிகம் சேர்க்க வேண்டும் கண்டிப்பாக வெள்ளைச் சீனி தவிர்க்க வேண்டும். தேன் அல்லது வெல்லம் தேவைப்படின் சேர்க்கலாம், கூடிய

(03 ஆம் பக்கம் பார்க்க)

## தினசரி தியானம்

### ஞாயிறு புகுந்த ஞாலம்

உன்னை நான் அணுகில் ஐயனே; உன்மயம் ஆய் விடுவேன் என்பதில் ஐய மொன்று மில்லை.

வெளிச்சத்தையும், வெப்பத்தையும் ஓயாது வழங்கிக் கொண்டிருப்பதுஞாயிறு நாம் வசித்து வரும்இந்த ஞாலம் முன்பு ஒரு கால் அந்த ஞாயிற்றினிடம் இருந்தது; அதைப் பிரிந்து வந்து பல காலத்துக்குப் பிறகு இது வெப்பத்தையும் வெளிச்சத்தையும் இழந்து விட்டது. திரும்பவும் இந்தப் பூமியைச் சூரியனுக்குள் எடுத்துப் போட்டால் இது பழைய படி சூரிய சொரூபம்ஆய் விடும். பரமாத்மா விடமிருந்து தான் பிரிந்திருப்பதாக ஜீவாத்மன் அஞ்ஞானத்தால் உணர்கிறது. பரபோதம் பெற்றதும் ஜீவன் பரம் பொருள் ஆய்விடும்.

யான் எனது என்னும் செருக்கு அறுப்பான்
வானோர்க்கு
உயர்ந்த உலகம் புகும்

திருக்குறள்

ஸ்ரீமத்சுவாமி சித்பவானந்தர்

# ஜே.வி.பி இனவாதத்தை தூண்டுகிறது ரெலோவின் தலைவர் குற்றச்சாட்டு

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசை விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்தக் கூடாதென்று, ஜே.வி. பி வலியுறுத்தியுள்ளமை இனப்பிரச்சினையைத் மேலும் சிக்கலாக்குமென்று, ரெலோவின் தலைவரும் வன்னிப்பாராளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

ஜே.வி.பியின் நிலைப்பாடு குறித்து அதிதிருப் வெளியிட்ட ரெலோ நேற்றுஅறிக்கையொன்றை வெளியிட்டது அவ் வறிக்கையிலே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது,

குறுகிய அரசியல் லாபம் தேடும்வகையில் ஜே வி பி செயல்படாதுநாட்டுமக்களது நலன்களையும் நாட்டின் எதிர்கால அபிவிருத்தியையும் கருத்தில் கொண்டு புலிகளுடன் அரசுபேச்சுவார்த்தை நடாத்தி ஒத்துழைப்புவழங்கும் வகையில் செயல்பட வேண்டும்

இனவாதத்துக்கு எதிரான கொள்கையுடைய ஜே வி பி தற்பொழுது இனவாதப்போக்கில் செயல்படுவது தமிழ் மக்களுக்கு எதிராக ஜே. வி பி செயல்படுவதே எண்ணத் தோன்றுகிறது.

ஜே வி பியின் இனவாதப் போக்கைவிட்டு, இனப்பிரச்சனைத் தீர்வுக்கு மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்துடன் அரசு புலிகளுடன் பேச்சு நடாத்துவதற்கு ஆதரவுவழங்க வேண்டுமென்றும், அவ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)


## நல்லைக் குமரன் மலர் 2001 (09) வெளியீட்டு விழா

தலைவர் திரு. இ. இராமலிங்கம்
மாநகர ஆணையாளரும், சைவ சமய விவகாரக் குழுவின் தலைவரும்.

காலம் 15- 08- 2001 புதன் கிழமை
மு.ப 9 00 மணி (புதிய. நேரம்)

இடம் துர்க்காதேவி மணிமண்டபம்
கோவில் வீதி, நல்லூர்:

ஆய்வுரை திருமதி கலைவாணி இரமாநாதன்
முதுநிலை விரிவுரையாளர், இந்து நாகரிகத்துறை, யாழ்ப்பாண பல்கலைகழகம்:

பயனுள்ள பல ஆக்கங்களைத் தாங்கி நறுமணம் பரப்பும் மலரினைப் பெற்றுப் படித்துப் பயன் பெறும் வண்ணம் ஆர்வலர்கள் அனைவரையும் அன்போடு அழைக்கின்றோம்,

சைவ சமய விவகாரக் குழு
13. 08 2001 யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்
(2392)



யாழ்ப்பாணப்


## மாவின் விலை அதிகரிக்காது

(கொழும்பு)

மாவின்விலை அதிகரிக்கப் பட மாட்டாது என்றும், மாவின் விநியோகத்தை அடுத்த மாதத்திலிருந்து பிறிமா ஆலையே மேற்கொள்ளவிருப்பதாகவும் வெளியான செய்திகள் பொய் என அமைச்சர் றெஜிரணதுங்க தெரிவித்துள்ளார்.

மாவின் விலையை அதிகரிப்பதற்கு பிறிமா ஆலைக்கு எந்தவிதமான அதிகாரத்தையும் திறைசேரி வழங்கவில்லை,

ஏனைய வர்த்தகர்களும் மா விநியோகத்தில் பங்கு பற்றலாம் என்ற வகையில் தாராள விநியோகத்திற்கு மாத்திரம் திறைசேரி அனுமதி வழங்கியுள்ளது:

உணவுத் திணைக்களத்தின் களஞ்சிய சாலைகளில் ஒரு மாதத்திற்கான மா கையிருப்பில் உள்ளது என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (செ)

## 33 பிள்ளைகளை...

பாகரனின் காலத்திலேயே மக்கள விடுதலையைப் பெற வேண்டு மென்பதற்காகவுமே தம்துபிள்ளைகளை விடுதலைப்புலிகள் அமைப்பில் தாம் இணைத்ததாக பெற்றோர்கள் தெரிவித்துள்ளனர்:

## உலகவங்கி தூதுக்குழுவிடம் ஆசிரியர்சங்கம் கோரிக்கை

எதிர்காலத்தில் ஆசிரியர்களை உருவாக்கி கல்விச்சமுகத்திற்கு வழங்கவுள்ள யாழ்ப்பாணம் தேசியகல்வியியல்கல்லூரிக்கு பொருத்தமான இடத்தில் நிரந்தரக்கட்டடம் அமைத்து உதவவேண்டுமென உலகவங்கித் தூதுக்குழுவிடம் இலங்கைத்தமிழ் ஆசிரியர் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

இலங்கைத்தமிழ் ஆசிரியர் சங்கத்தின் சிரேஷ்டதுணைப் பொதுச்செயலாளர் த.பஞ்சலிங்கம் உலகவங்கி தூதுக்குழுவினரைச் சந்தித்து அவர்களிடம் கையளித்த மகஜரில்

யாழ் மாவட்டத்தில்உள்ள சகல பாடசாலைகளிலும் கணனிக்கல்வியை பயிற்றுவிப்பதற்கு கணனிகள்வழங்கப்படவேண்டும்.

ஆசிரியர்களின் நியமனத்தின்போது ஆரம்பஆசிரியர்களுக்கும் ஆங்கிலஆசிரியர்களுக்கும் முக்கியத்துவம் கொடுக்கவேண்டும்.

யாழ்ப் பாணத்தில்உள்ள மேலதிக கல்விப்பணிப்பாளர் பணிமனைக்கு உதவிகள் அதிகாரங்களைவழங்குதல் ஆகிய கோரிக்கைகளை முன்வைத்தனர்.

இதேவேளை மூவர் அடங்கிய உலகவங்கித்தூதுக்குழுவை மேலதிக கல்விப்பணிப்பாளர் நா.தணிகாசலம்பிள்ளை, வடமராட்சி வலய கல்விப்பணிப்பாளர் வ சிவராசா வலிகாமம்கல்வி வலய பணிப்பாளர் வ.இராசையா தென்மராட்சி கல்வி வலய கல்விப்பணிப்பாளர்க செல்வராசா தீவக வலயகல்விபணிப்பாளர் ப விக்னேஸ்வரன் யாழ் வலயபிரதிக்கல்விப் பணிப்பாளர் ந.தவராசாஆகியோர் சந்தித்தனர். (வ)

## அரசுக்கு..

லியாமற்றும்குருநாகல் ஆகிய மாவட்டங்களில்;

உள்ள பிரதேச செயலக ரீதியாகஇவ் ஆர்ப்பாட்டங்கள் நடை பெற்றுள்ளது;

இரண்டு லட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் மற்றும் கட்சித் தொண்டர்கள் அரசுக்கு எதிரான கோஷங்களை எழுப்பியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். [இ]

## விடைத்தாள்

8 மணி முதல் பிற்பகல் 4 மணி வரை நடைபெறவுள்ளது.

பரீட்சை விடைத்தாள் திருத்தும் பணி தொடர்பாக சம்மந்தப்பட்டவர்களுக்கான கூட்டமொன்று இம் மாதம் 27ம், 28ம் திகதிகளில் பரீட்சைஆணையாளர் தலைமையில் கொழும்பு றோயல் கல்லூரியில் நடைபெறவுள்ளது. (வ)

## அமைச்சர்...

படி அமைச்சர் தலைமையிலானகுழுலண்டன்செல்கிறது

இக்குழுவில் துறைமுக அதிகாரசபைத் தலைவர் அட்மிரல் மோகன் சமரசேகர, காப்புறுதிக் கூட்டுத்தாபனப்

## கொள்ளையர்கள் அகப்பட்டனர்

(திருகோணமலை)

திருகோணமலைகூட்டுறவுச் சங்க மொத்தவிற்பனை நிலையத்திலிருந்து வங்கியில் வைப்பிலிட கொண்டுசென்ற 15இலட்சம்ரூபா பணத்தை கொள்ளையிட்டுதப்பிச்செல்ல முயன்ற இருவர் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

நேற்றுக்காலை நடைபெற்ற இச்சம்பவத்தில் மோட்டார் சைக்கிளில்வந்த இருவரே பணத்தை கொள்ளையிடமுயன்று வகையாக மாட்டிக் கொண்டவர்களாவர். (ந-5)

## ஜே.வி.பியுடன்

தற்கான பிரேரணை ஒன்றை சபாநாயகர் அனுரா பண்டாரநாயக்காவிடம் சமர்ப்பிப்பதற்காக இன்று கொழும்பில் எதிர்க்கட்சிகள் கூடி ஆராயவுள்ளன;

17ம் திகதி பாராளுமன்றக் கட்டடத்தில் நடைபெறவுள்ள எதிர்க்கட்சி எம். பிக்கள் 115 பேர் கலந்து

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

**புதிய கல்வியாண்டிற்கான பதிவுகள்**
**2001 - 2002**

எல்லாக் கற்கை நெறிகளுக்கும் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கான விண்ணப்பப் படிவங்களும் ஏனைய ஆவணங்களும் தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இதுவரை தம்மைப் பதிவு செய்து கொள்ளாத மாணவர்கள் உடனடியாக தமது பதிவுகளை யாழ். பல்கலைக்கழக பரீட்சைகளும் அனுமதிகளும் கிளையில் மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். 15-08-2001 இற்கு முன்னதாக பதிவை மேற்கொள்ளாதவர்களின் பெயர்கள் வெற்றிடங்களை நிரப்புவதற்காக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு அனுப்பி வைக்கப்படும் என்பதைக் கவனத்திற் கொள்ளவும்.

**விரிவுரைகள்**

விவசாயபீடத்திற்கு தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான விரிவுரைகள் (2001/2002 கல்வியாண்டு) 01-10-2001 அன்று ஆரம்பமாகவுள்ளது.

(கி-2391)

பதிவாளர்.

மக்களை விடுதலையைப் பெற வேண்டுமென்பதற்காகவுமே தம்துபிள்ளைகளை விடுதலைப்புலிகள் அமைப்பில் தாம் இணைத்ததாக பெற்றோர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை கடந்தவாரம் மட்டக்களப்பு அரசடித்தீவில் 43பெற்றோர்கள் தமதுபிள்ளைகளை விடுதலைப்புலிகள் அமைப்பில் இணைத்ததாகவும் மட்டக்களப்புசெய்திகள் தெரிவிக்கின்றன. (இ)

## சர்வதேச...

களை ஒடுக்க பயன் படுத்தியுள்ளது.

நளின்பொன்சேகா, உபாலிசஜநாயக்கா ஆகிய ஆயுதமுகவர்கள் மூலம் இவ் இரசாயன ஆயுதங்களை இலங்கையரசு கொள்வனவு செய்தமை தெரியவந்துள்ளது.

ஆயுதக் கொள்வனவில் இடம்பெற்ற ஊழல்விசாரணையின் போதே மேற்படி இரசாயன ஆயுதங்களைப் படைத்தரப்பினர் பயன்படுத்துவது கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.

இதேவேளை இலங்கை இராணுவத்தினர் 1995ஆம் ஆண்டு சூரியக்கதிர் இராணுவ நடவடிக்கையில்விடுதலைப்புலிகள் இரசாயன ஆயுதங்களை பயன்படுத்தியதாக குற்றம் சாட்டியமையும்இங்கு குறிப்பிடத்தக்கது. (இ)

படி அமைச்சர் தலைமையிலானகுழுலண்டன்செல்கிறது

இக்குழுவில் துறைமுக அதிகாரசபைத் தலைவர் அட்மிரல் மோகன் சமரசேகர, காப்புறுதிக் கூட்டுத்தாபனப் பொதுமுகாமையாளர் எம். கந்தசாமி மற்றும் இலங்கைக் கப்பற் கவுன்சில் தலைவர் ரோஹான். மசகோறனை ஆகியோர் அடங்குகின்றனர்.

இதேவேளை ஒரு கொள்கலனுக்கு மேலதிகவரியாக 350 - 1000 டொலர்களும். கொள்கலனை ஒரு கப்பலில் இருந்து இறக்கி மறுகப்பலுக்கு ஏற்றுவதற்கு மேலதிகவரியாக 30 - 60 டொலர்களும் அறவிடுவதென்று சர்வதேச காப்புறுதி நிறுவனங்கள் தீர்மானித்துள்ளன. (இ)

பில் எதிர்க்கட்சிகள் கூடி ஆராயவுள்ளன.

17ம் திகதி பாராளுமன்றக் கட்டடத்தில் நடைபெறவுள்ள எதிர்க்கட்சி எம். பிக்கள் 115 பேர் கலந்து கொள்ளும் கூட்டத்தில் மேற்படி பிரேரணை ஆராயப்படவுள்ளது.

17ம் திகதி பாராளுமன்றத்தை கூட்டுவதற்கான கடிதத்தில் ஒப்பமிட்டுள்ள ஜே.வி.பி.யினர், 20ம் திகதி பாராளுமன்றத்தைக் கூட்டுமாறு கோரும் பிரேரணைக்கு ஆதரவு அளிப்பதா? அல்லது விடுவதா என்று இன்னமும் தீர்மானிக்கவில்லையென்று ஜே. வி. பி. வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ம)

## கண்ணீர் அஞ்சலி

02. 08. 2001ல் காலமாகிய எமது பிரதேச சபையின் ஓய்வு பெற்றமின் இணைப்பாளர்

**அமரர் செல்வம் வீரசிங்கம்**

அவர்களின் பிரிவினால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கிறோம்.

தலைவர், உறுப்பினர்,
உத்தியோகத்தர், ஊழியர்,
நலம்புரிச் சங்கம்,
நல்லூர் பிரதேச சபை.

(சி/ 2383)



நவநாகரிக தங்க நகைகளுக்கு

# நிருத்திகா ஜுவலர்ஸ்

177, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். T. P 021-2694

(கி/2367)

இப் பத்திரிகை ''கைலம்புரி'' அன் கோ ஸ்தாபனத்தாரால் இல. 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2001ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 14-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.